# அட்டர்ணிஜெனரல் இலாகாமீது பொலிஸ் இலாகா

Registered as a News Paper in Ceylon   விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 278
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கார்த்திகை 2 ரமழான் 17 செவ்வாய்க்கிழமை (17-11-70)



போன் 7199

பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

S-LON
P. V. C. பைப்புகளும்
இணைப்புகளும்
மலிவான விலையில்
கிடைக்குமிடம்:-
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

# புகார்

## மேதின ஊர்வலம் வழக்கின் எதிரொலி

யாழ்ப்பாணம், செவ். மேதின ஊர்வல வழக்குத் தோல்வியில் முடிவடைந்ததைத் தொடர்ந்து, "தவறான ஆலோசனைகளை ஏன் கொடுத்தீர்கள்?" என்று அட்டர்ணி ஜெனரல் இலாகாவை பொலிசார் கேட்டுள்ளதாக அறியப்படுகிறது.

பொலிசாரின் உத்தரவை மீறி 1969-ம் ஆண்டு மே மாதம் முதல் திகதி மேதின ஊர்வலம் நடத்தியதாக யாழ்ப்பாணத்தில் சீனச்சார்புக்கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. கே. ஏ. சுப்பிரமணியம் உட்பட மற்றும் சிலர் மீது குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு உரியகாலத்திற்குள் வழக்குத்தாக்கல் செய்யப்படவில்லையென்ற ஒரு காரணத்தினாலும் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. அட்டர்ணி ஜெனரல் இலாகாவின் ஆலோசனையின் மீதே இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்ததாகவும் தவறான முறையில் ஏன் ஆலோசனை தெரிவித்து பொலிஸ் இலாகாவின் மதிப்பைக்கெடுத்தீர்களென்றும் பொலிஸ் இலாகா இப்போது அட்டர்ணி ஜெனரல் இலாகாவைக் கேட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

... ...

# சோஷலிச நாடுகளுடன் வெற்றிதரும் சிறந்த உடன்படிக்கைகள்

## நியமனம்

கோட்டை, திங்கள் இலங்கைச் சுப்ரீம் நீதிமன்றத்தின் வழக்கறிஞரான திரு. திலக் ஈ குணரத்ன பிரிட்டனிலுள்ள இலங்கை ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## நூல்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், செவ். கைதடி இந்து வாலிபர் சங்கத்தின் சேவைகளைப் பாராட்டி மில்க்வைற் ஸ்தாபன அதிபர் சிவநெறிப் புரவலர் திரு க. கனகராசா 200 சைவ சமய நூல்களை சங்கத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளார்.

## பொறியியல் பகுதிக்கு தமிழ் மாணவா தெரிவு பற்றி அதிருப்தி

### அமைச்சர் குமாரசூரியருக்கு மகஜர்

கோட்டை, திங்கள் இலங்கைப் பல்கலைக் கழக பொறியியல் பகுதிக்கு தமிழ் மாணவர் தெரிவு ஏமாற்றத்தையும், கவலையையும் அளிப்பதாக தபால் அமைச்சர் திரு செல்லையா குமாரசூரியருக்கு இலங்கைப் பல்கலைக் கழக பொறியியல்பீட தமிழ் மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

பொறியியல்பீட தமிழ் மாணவர் அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில தெரிவித்துள்ளதாவது:

"பல்கலைக் கழக பிரவேச முடிவுகள் வெளியாகியிருப்பதை கண்ணுற்றோம்; பெரும் அதிர்ச்சிக்குள்ளானோம் பொறியியல் பீடத்துக்கு. பொதுத் தராதரப் பத்திர வ்யர்தரப் பரீட்சையில் மாணவர்கள் பெற்ற

கப்பட்டு தற்போது பிரவேச அனுமதிபெற்றிருப்பது எங்களுக்கு ஏமாற்றத்தையும், வருத்தத்தையும் தருகிறது. மேலும் கட்டுப்பெத்தை தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படவேண்டிய 120 மாணவர்களில், ஏறத்தாழ 80 பேர் தமிழ் மாணவர்கள் என பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் பார்க்கும்போது இது உத்தியோகப்பற்றற்ற செய்தியெனும் கேள்வியுற்றிருந்தோம் எனவே, மொத்தம் ஏறத்தாழ 200 தமிழ்மாண

(4-ம் பக்கம் பார்க்க)

## நகரசபை தேர்தல்

வல்வெட்டித்துறை, திங்கள்

வல்வெட்டித்துறை நகர சபை தேர்தலுக்கான நிய

# நாடு திரும்பிய அமைச்சர் இலங்கரத்தின தகவல்

கோட்டை, திங்கள் சோஷலிஸ நாடுகள் பலவற்றுடன் இலங்கை சிறந்தமுறையில் பலனளிக்கும் வர்த்தக உடன்படிக்கைகளை செய்து கொண்டுள்ளது.

சோவியத் யூனியன், யூகோஸ்லாவிய, ஜெர்மன் ஜனநாயக குடியரசு ஆகிய நாடுகளுக்கு அண்மையில் விஜயம்செய்துவிட்டு நாடு திரும்பியுள்ள வெளிவர்த்தக அமைச்சர் திரு. டி பி இலங்கரத்ன இந்தத் தகவல்களைத்தெரிவித்தார்.

சோவியத் யூனியனுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி சுமார் 90 லட்சம் ரூத்தல் தேயிலையை அந்நாடு அடுத்த ஆண்டில் கொள்முதல் செய்து கொள்ள இணங்கியிருக்கின்றது. தற்பொழுது 45 லட்சம் ரூத்தல் தேயிலையை மாத்திர...

...றையும் இறக்குமதி செய்து கொள்ள ஜெர்மன்குடியரசு இணங்கியிருக்கின்றது இலங்கை அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவவும் உற்பத்திப் பொருட்களைக் கொள்முதல் செய்யவும் யூகோஸ்லாவியா இணங்கியிருக்கின்றது.

மகாவலி திசைதிருப்பும் திட்டத்தைப் பொறுப்பேற்றிருக்கும் யூகோஸ்லாவிய ஸ்தாபனம் இலங்கையின் அபிவிருத்திக்கு கடன் வழங்க முன்வந்துள்ளது.

ஷரு17

## சிறுமியைக் காணவில்லை

### மூவர் கைது

மாவிட்டபுரம், திங்கள் 12 வயதுச் சிறுமியைக் கடத்திச் சென்றதாக கூறப்படும் மூவரைப் பொலிசார்

## "அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை திட்டத்தை பூர்த்தியாக்குக"

யாழ்ப்பாணம், செவ். அச்சுவேலி கைத்தொழில் பேட்டை திட்டத்தை துரிதப்படுத்தி பூர்த்தியாக்கும்படி கைத்தொழில் விஞ்ஞான அமைச்சரைக்கோரும் தீர்மானம் வட இலங்கை வர்த்தக கைத்தொழில் கூட்டுத்தாபன சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் பாம்கோட்டில் 'மைற்' ஸ்தாபன அதிபர் டாக்டர் கோபாலபிள்ளை மகாதேவா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை திட்டம் பூர்த்தியடைவதன்மூலம் வேலையில்லாப் பிரச்னை தீர்வதற்கு வழிபிறக்குமென இக்கூட்டத்தில் வற்புறுத்தப்பட்டது. அமைச்சருக்கு இதுசம்பந்தமாக ஒரு தந்தி அனுப்பப்பட்டது.

தலைமைவகித்த டாக்டர் கோபாலபிள்ளை மகாதேவா பேசுகையில், வடபகுதியில் பொருளாதார அபிவிருத்திக்கு அரசாங்கம் புதிய கைத்தொழில் திட்டங்களை ஆரம்பிக்கலாமென்றும் அவர் கூறினார்.

## ராஜினுமா

கோட்டை, திங்கள் சுங்க இலாகா விவகாரங்களை ஆராய நியமிக்கப்பட்ட கமிட்டியின் தலைவரான தெஹியோத்தை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. தனபால விரசேகரா தனது தலைவர் பதவியை இராஜினுமாச் செய்துள்ளார்.

இவரது ராஜினுமாவைத் தொடர்ந்து நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா அம்பலாங்கொடை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு, எல் சி. டி. சில்வாவை மேற்படி குழுவின் தலைவராக நியமித்துள்ளார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுகள் வெளியாகியிருப் பதை கண்ணுற்றேம்; பெரும் அதிர்ச்சிக்குள்ளா னேம் பொறியியல் பீடத் துக்கு, பொதுத் தராதரப் பத்திர வ்யர்தரப் பரீட்சை யில் மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் 117 தமிழ் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்ப தாக முன்வெளியான செய் திகளுக்கு முற்றிலும் எதிர் மாருக, 56 தமிழ் மாணவர் கள் மட்டும் ஏறத்தாழ 50 வீதத்துக்கு மேலாக குறைக்

ஏறத்தாழ 200 தமிழ்மாண

(4-ம் பக்கம் பார்க்க)

## நகரசபை தேர்தல்

வல்வெட்டித்துறை, திங்கள்

வல்வெட்டித்துறை நகர சபை தேர்தலுக்கான நிய மனப்பத்திரங்கள் இம்மா தம் 20ந் திகதி தாக்கல் செய்யப்படவிருக்கின்றன. 9 வட்டாரங்களிலும் சுமார் 36 பேர் போட்டியிடுவார் கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது

## காணவில்லை

### மூவர் கைது

மாவிட்டபுரம், திங்கள்

12 வயதுச் சிறுமியைக் கடத்திச் சென்றதாக கூறப் படும் மூவரைப் பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

காங்கேசன்துறைசிமெந்து தொழிற்சாலை 'குவாட்டர்' சில் வசிக்கும் ஜோன் சன்னன் பவர் காங்கேசன்துறைப் பொலிசில் செய்துள்ள புகா ரில் தமது 12வயதுமகளைக் காணவில்லையென்த் தெரி வித்திருந்தார்,

இதையடுத்து புலன் விசா ரணையில் ஈடுபட்ட பொலி சார் மூவரை சந்தேகத்தின் பேரில்கைதுசெய்துள்ளனர்.

கொள்முதல் செய்து கொள்ள இணங்கியிருக்கின் றது. தற்பொழுது 45 லட் சம் ருத்தல் தேயிலையை மாத்திரமே அந்தநாடு வாங் குகின்றது. டப்பாக்களில் அ...க்கப்படும் அன்னுசிப் பழ...களை முழுமையாக கொள்முதல் செய்து கொள்ளவும் சோவியத் யூனியன் இணங்கியிருக் கின்றது 5 கோடி ரூபாய்க் கான கடன் உதவிகளை வழங் கவும் சோவியத் யூனியன் முன்வந்திருக்கின்றது பசளை கள் உதிரிப் பாகங்கள் வாங்கு வதற்கான கடன் வசதிகளை நீடிக்கவும் இணங்கியிருக் கின்றது.

இலங்கை உற்பத்திப் பொருட்கள் பலவற்றை

இலங்கையின் அபிவிருத்தி சகு கடன் வழங்க முன்வந் துள்ளது.

பர் டாக்டர் கோபாலபிள்ளை மகாதேவா தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

அச்சுவேலி கைத்தொழில்

கைத்தொழில் திட்டங்களை ஆரம்பிக்கலாமென்றும் அவர் கூறினார்.

துள்ளார்,

# வடக்கு கிழக்கில் மொழிக் கொள்கை; அரசு திருப்தி

கோட்டை, செவ்.

வடக்கு, கிழக்கு மாகா ணங்களில் மொழிக் கொள்கை செயற்படுத்தப் பட்டுவருவது குறித்து அர சாங்கம் பெரும் திருப்தி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெறும் அரசாங்க அதிபர்கள் மகா நாட்டில் ஆராய்வதற்காக அரசாங்க அதிபர்களிடம் இருந்து கிடைத்த அறிக்கை களிலிருந்து இது தெரியவரு கிறது என உள்ளூராட்சி ம.ற. பொதுநிர்வாக அமைச்சைச் சேர்ந்த பிரமு கர் ஒருவர் தெரிவித்திருக் கிறார்

அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:-

மேற்படி அறிக்கைகளிலி ருந்து கச்சேரிகளில் மொழிக்கொள்கை திருப்தி யளிக்கத்தக்கவகையில் செயற்படுத்தப்படுகிறது எனத் தெரியவருகிறது.

வடக்கில் காரியாதிகாரி ஒரு வரிடமிருந்து ஓரேயொரு கடிதம் மாத்திரம் ஆங்கி லத்தில் அமைச்சுக்குக்கிடை த்தது, இதற்குக் காரணம் அங்குள்ள சிங்கள தட்டச்சு யந்திரம் பழுதானமையே யாகும்

இன்று கொழும்பு மத்திய வங்கிக் கட்டிடத்தில் நடை பெறும் அரசாங்க அதிபர்களின் மகாநாட்டை பிரதமர் திருமதி பண்டார நாயக்கா ஆரம்பித்துவைக் கவுள்ளார், 4 நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இம்மாநாட்டில் அடையாள அட்டை வழங்குதல், இ நாட்டு பிரஜைகளாக பதிவு செய்தல், அரசாங்கக் கட்டி டங்களைப் பாதுகாத்தல், மாவட்டங்களில்பாதுகாப்பு நடவடிக்கைகள், கிராமத் தொண்டர் இயக்கம் பொன்ற பல விடயங்கள் ஆராயப்படவுள்ளன



கொழும்பு, செவ்வாய்

நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 324-வது சீட்டிழுப்பின்முடி வுகள் வருமாறு:-

முதலாவது பரிசு

20X 0668 ரூ. 92,010

இரண்டாவது பரிசு

11 J 0557 ரூ. 36 804

மூன்ருவது பரிசு

35 B 0319 ரூ. 9,201

தலா ரூபா 460 05 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:-

| | |
|---|---|
| 24 M 0680 | 36 S 0411 |
| 23 X 0003 | 28 S 0931 |
| 12 V 0809 | 02 P 0219 |

| | |
|---|---|
| 13 K 0288 | 12 X 0469 |
| 07 M 0197 | 11 R 0831 |
| 37 E 0344 | 27 V 0472 |
| 28 O 0932 | 12 T 0100 |
| 02 L 0646 | 09 H 0266 |
| 08 T 0255 | 23 G 0023 |
| 20 R 0576 | 09 H 0282 |
| 28 U 0163 | 05 Z 0645 |
| 38 E 0887 | 32 C 0095 |
| 07 A 0746 | 34 C 0965 |
| 22 C 0364 | 03 A 0762 |
| 26 P 0691 | 25 A 0702 |
| 06 T 0928 | 33 J 0637 |
| 31 Y 0511 | 37 V 0938 |
| 07 B 0436 | 32 J 0574 |
| 03 W 0869 | 11 L 0246 |
| 23 H 0557 | 32 G 0673 |
| 32 Y 0573 | 13 A 0974 |
| 34 R 0009 | 13 Q 0967 |
| 17 J 0113 | 14 U 0527 |
| 01 T 0831 | 24 Z 0314 |
| 29 T 0324 | 14 X 0402 |
| 09 G 0971 | 07 H 0714 |
| 11 E 0919 | 27 C 0772 |
| 24 H 0192 | 38 W 0757 |
| 26 E 0619 | 32 M 0896 |
| 15 G 0230 | 11 U 0477 |
| 20 D 0099 | 26 V 0624 |
| 24 M 0765 | 31 D 0424 |
| 37 O 0207 | 21 V 0437 |
| 01 K 0620 | 20 O 0943 |
| 02 P 0558 | 22 X 0881 |
| 16 F 0863 | 12 Q 0666 |
| 32 Y 0051 | 19 M 0405 |
| 33 U 0489 | 33 W 0758 |
| 12 E 0622 | 19 Y 0428 |
| 27 H 0483 | 36 U 0203 |
| 10 B 0522 | 37 G 0726 |
| 18 X 0873 | 16 H 0174 |
| 29 E 0567 | 16 V 0993 |
| 39 W 0125 | 33 W 0794 |
| 17 T 0071 | 03 Q 0922 |
| 18 S 0647 | 17 X 0328 |
| 19 E 0500 | 31 W 0427 |
| 23 V 0342 | 03 T 0462 |
| 21 E 0584 | 16 J 0671 |
| 14 Q 0704 | 07 V 0435 |

(இவை உறுதிப்படுத்தப் பட்வேண்டியவை)

# 'மேலும் நாணய மதிப்பு குறைப்பு செய்யப்படமாட்டாது'

## டாக்டர் என். எம். பெரேரா அறிவிப்பு

கோட்டை, திங்கள்

'இலங்கை ரூபா மேலும் நாணய மதிப்புக்குறைப்புச் செய்யப்பட மாட்டாது என்று நிதி அமைச்சர் டாக் டர் என். எம். பெரேரா தெரிவித்துள்ளார்.

இளம் சோஷலிச சங்க ஆதரவில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன் றில் வரவு-செலவுத்திட்டம் பற்றி உரையாற்றும்போது நிதியமைச்சர் டாக்டர்என். எம். பெரேரா மேற்கண்ட வாறு சொன்னர்.

டாக்டர் பெரேராமேலும் தொடர்ந்து பேசுகையில் நாணயமதிப்புக் குறைப்பு மூலம்நாட்டின் பொருளா தாரபிரச்சினைகளுக்குத்தீர்வு காணும் நோக்கமில்லை என நான் சர்வதேச நாணய நிதிஸ்தாபனத்துக்கு அறி வித்துள்ளேன். ''என்று கூறிய அவர் மேலும் கூறிய தாவது:-

'ஐக்கிய முன்னணி அர சாங்கம் ரூபாயின் நாணய மதிப்பைக் குறைத்து மக் களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்க விரும்பவில்லை நாணய மதிப்புக் குறைப் பின்றியே பொருளாதார நிலையைச்சீர்செய்யும் நிலை யில் அரசாங்கம் உள்ளது. என்பதைக் காட்டவேண்டு மென்பதே எனது நோக்கம்.

தற்போது உங்களின் ஒத் துழைப்புடன் நான் சர்வ தேச நாணய ஸ்தானத்துக்கு பொருளாதாரப் பிரச்னைக ளுக்குச் நாணயமதிப்பைக் குறைப்பதன் மூலம் பரி காரம் தேடலாம்என ஆலோ சிப்பது தவருனது என்பதை நிரூபிக்கலாம் என நம்பு கிறேன்.

முன்னைய அரசாங்கம் செல்வந்தர்களிட மிருந்து வரி வசூலிக்கத் தயங்கி நாணயத்தின் மதிப்பை நேரடியாகவும் மறைமுக மாகவும் குறைத்துள்ளது. ஆனல் இந்த அரசாங்கம் அப்படிச் செய்யத் தயாராக வில்லை. மக்களின்ஒத்துழைப் போடு நாங்கள் நிலைமை யைச் சமாளிப்போம்.

## லூனு 17 சந்திரனை வலம் வருகிறது

மாஸ்கோ, நவ.16

ரஷ்யா விண்வெளிக்கு அனுப்பிவைத்த ஆளில்லாத லூனு 17 என்ற விண்கலம் தற்போது சந்திரனை வலம் வந்துகொண்டிருக்கிறது.

5 தினங்களுக்கு முன்னர் இது அனுப்பப்பட்டது. பூமி யுடனுன வானொலித்தொட ர்பு சிறந்த முறையில் இயங் குவதாக ஜேர்மன் வான நிலை ஆராய்ச்சிநிலையம் கூறி யுள்ளது.

# 'சம சம்பளம், அரசியல் உரிமை ஆசிரியர்களுக்கு வேண்டும்'

கோட்டை, திங்கள்

''சுயபாஷா ஆசிரியர்க ளுகம் ஆங்கில ஆசிரியர்க ளுக்கும் உரியவேறுபாடு நீக்கப்பட்டுச் சமசம்பளம் கொடுக்கப்படவேண்டும்.''

மேற்கண்டவாறு கொழும் பில் நடைபெற்ற சம்பள சம்பந்தமான விசாரணை யின்போது சில்வா கமிஷன் முன் சாட்சியமளித்த அகில இலங்கை ஆசிரியர் சங்கங் களின் ஆலோசனைச்சம்மேள னம் ஏகமனதாகக்கேட்டுக் கொண்டது.

திரு. அ வைத்திலிங்கம் தலைமையில் திரு. எல் ஆரிய வன்ஸ, திரு. டபிள்யூ. ஜே. சந்திரபாலா, திரு. இ. கந் தையா, திரு. என் சிவ ஞானம், திரு. என். சிவ ராசா, திரு. எட்வேட் வீர சேகரா, ஜனுப் எம். யாசீன் ஆகியோர் சம்மேளனத் தின் சார்பில் சாட்சியமளித் தனர்

தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்களுக்கு 300 ரூப வும்தராதரப்பத்திரம்உள்ள வர்களுக்கு 360 ரூபாவும், பயிற்றப்பட்டவர்களுக்கு 420 ரூபாவும், பட்டதாரி களுக்கு 480 ரூபாவும். பயிற்றப்பட்ட பட்டதாரி களுக்கு 580 ரூபாவும், 4-ம் தர அதிபர்களுக்கு 460 ரூபாவும், 3-ம்தர அதிபர்க ளுக்கு 520 ரூபாவும் 2-ம் தர அதிபர்களுக்கு 620 ரூபாவும், 1-ம் தர அதிபர் களுக்கு 770 ரூபாவும். உயர் தர அதிபர்களுக்கு 1060 ரூபாவும் ஆரம்பச்சம்பளம் கொடுக்கப்படவேண்டு மென சம்மேளனம் கமிஷ னிடம் கேட்டுக்கொண்டது. விசேஷ பயிற்சி பெற்வர்க ளுககும், விசேஷ பட்டம் பெற்றவர்களுக்கும் சம் பளத்தில் இரண்டுபடியேற் றங்களைக் கூட்டிக்கொடுக்கு மாறும் கேட்டது.

பயிற்றப்பட்ட ஆசிரியர் கள் சுயபாஷா ஆசிரியர்கள் உட்பட பட்டம்பெற்ருல் பயிற்றப்பட்ட பட்டதாரி களாகக் கணிக்கப்படவேண் டும் என வற்புறுத்தப்பட் டது.

சம்மேளனம் கூறிய இதர ஆலோசனைகள் வருமாறு:

ஒவ்வொருபாடசாலைக்கும் அதிபருடன் உதவி அதிப ரும் பகுதித் தலைவர்களும் நியமிக்கப்பட வேண்டும். பகுதித் தலைவர்கள்மகாவித் தியாலயங்களில் 100 மாண வருக்கு ஒருவரும் கனிஷ்ட வித்தியாலயங்களில் 200 மாணவருக்கு ஒருவரும் இருக்க வேண்டும் அதிப ருக்கு அடுத்த தரத்திலே உப அதிபர் நியமனம் கொடு க்கவேண்டும். மகாவித்தியா லயங்களைப்போல ஆயி ரத்துக்கு மேற்பட்ட கனிஷ்ட வித்தியாலயத்துக் கும் 2-ம் தர அதிபரை நிய மிக்கவேண்டும். பகுதித் தலைவர்களுக்கு மாணவர் களின் தொகைக்கு ஏற்ப 20 ரூபா தொடக்கம் 50 ரூபா வரை அலவன்ஸ் கொடுக்கவேண்டும். 500க்கு குறையாத 9-ம் வகுப்புத் தொடக்கம் 12 ம் வகுப்பு வரை உள்ளதும் விஞ்ஞான உயர்கல்வி வகுப்பில் 40 பேராவது உள்ளதுமான பாடசாலைகளை சுப்பர் கிறேட் பாடசாலைகளாகக் கணிக்கவேண்டும்.

எந்தப் பாடசாலையிலும் குறைந்தது இரண்டு ஆசிரி யர்கள் இருக்கவேண்டும். ஒரு ஆசிரியருடன் மாத்தி ரம் பாடசாலைகள் இருக்க கூடாது. சுகவீன லீவு, பிரசவ லீவு போன்றநீண்ட லீவு பெறும் இடங்களுக்குப் பதில் நியமனங்கள் வழங் கப்படவேண்டும்.

ஆசிரியர்களின் முதுமுறை அட்டவணை ஒன்று தயா ரிக்கப்படவேண்டும். தகுதி, திறமை சேவை முதலியவற்றைக் குறிப்பி ட்டு ஒவ்வொரு ஆசிரியர் களுக்கும் பதவி உயர்வுக் குப் போகும்போது காட் டக்கூடியதான அட்டைகள் வித்தியாபகுதியால் வழங் கப்படவேண்டும்.

ஏனைய உத்தியோகத்தின ரைப் போல இல்லாமல் அதிபர் உட்பட சகல ஆசி ரியர்களுக்கும் அரசியல் உரிமை வழங்கவேண்டும்.

### யாழ். ஆஸ்பத்திரி கமிட்டி தீர்மானம்

# முஸ்லிம் பெண்களுக்கு தனி இடம்!

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் ஆஸ்பத் திரி வெளிநோயாளர் சிகி ச்சை நிலையத்துக்கு வரும் முஸ்லிம் பெண் நோயாளி களுக்கு அவர்களின் மதசம் பிரதாயத்தைப் பேணக் கூடிய வகையில் தனிஇடம் ஒன்று ஒதுக்கி சுலபமான முறையில் சிகிச்சை பெற வசதி செய்து கொடுக்கப் படவேண்டும் என்ற தீர்மா னம் ஆஸ்பத்திரி கமிட்டிக் கூட்டத்தில் நேற்று ஏகமன தாக நிறைவேற்றப்படடது

திருமதி அந்தோனியார் சுவாமிநாதர் தலைமையில் நடைபெற்ற கமிட்டிக் கூட் டத்தில் மாநகரசபை உறுப் பினர் ஜனுப் எம் ஜி பசீர் ஜே பியினுல் கொண்டுவரப் பட்ட இப் பிரேரணையை திரு எஸ் யூ சோமசேகரம் ஆமோதித்தார்.

யாழ் ஆஸ்பத்திரியில் இறக்கின்ற முஸ்லீம்களின் ஜனுசாவை வைப்பதற்கு நாவலப்பிட்டி, கம்பளை. காலி ஆகிய இடங்களி லுள்ள அரசினர் ஆஸ்பத் திரிகளில் இருப்பதுபோன்ற தனியான பிரேத அறை ஒன்றை ஒதுக்கப்பட வேண்டுமென்ற ஜனுப் பசீ ரின் கோரிக்கையையும் கமிட்டி ஏற்றுக் கொண் டது. இது சம்பந்தமாக சுகாதார அமைச்சருடன் தொடர்பு கொண்டு உட னடி நடவடிக்கை எடுக்கும் படி வைத்திய சுப்பிரின்டன் கமிட்டியினுல் கேட்கப்பட் டுள்ளார்.

# 'தகுதிக்கேற்ப மாணவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும்'

## யாழ். தொழில்நுட்ப மாணவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்

கட்டுபெத்தைத் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் கள நடாத்திவரும் பகிஷ்க ரிப்பு இயக்கத்தை ஆத ரித்து நேற்று யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் கள் ஒருநாள் அடையாள பகிஷ்கரிப்புநடாத்தினர்கள் இப்பகிஷ்கரிப்பில் யாழ். தொழில்நுட்பக்கல்லூரியை சேர்ந்தசுமார்1000கசூமேற் பட்ட மாணவர்களும், மாணவிகளும் கலந்து கொண்டனர்.

தேற்றுக்காலை வழக்கம் போல் மாணவர்கள் கல்லூ ரிக்கு வந்தபோது அவர்க ளுக்கு அடையாள பகிஷ்க ரிப்புப்பற்றித் தெரிவிக்கப் பட்டதைத் தொடர்ந்து அனைவரும் தங்கள் போத னையினங்களுக்குரிய வகுப் புக்களிலிருந்து வெளியே றிக் கல்லூரி வளவிலும், வாசலிலும் கூட்டம் கூட் மாகக் குழுமி நின்றனர்

இதன்பின்னர் யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் மன்றத் தலைவர் திரு: க. முத்துக்குமாரசாமி தலைமையில் தொழில் நுட் பக் கல்லூரி விடுதிச்சாலை மண்டபத்தில் பகிஷ்கரிப்பி லீடுபட்ட மாணவர்களின் பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது. இக் கூட் டத்தில் தலைவர் பேசுகை யில் எந்தஇ த்தைசேர்ந்த வர்களாகவிருந்தாலும் பார பட்சமான முறையில் கட் டுப்பெத்தை தொழில் நுட் பக் கல்லூரிக்கு மாணவர் கள் அனுமதிக்கப்பட்ட தையே நாம் எதிர்க்கின் ேறுமேயொழிய எமக்குஎந்த இனத்தவர்கள்மீதும் துவே ஷமில்லை என்று குறிப்பிட் டார்.

இப்பகிஷ்கரிப்பு அமைதி யான முறையில் நடைபெற் றது. விரிவுரையாளார்கள் வழக்கம் போல் வந்திருந்த போதிலும் வகுப்புகள்நடை பெறவில்லை. [உ-டு. நிருபர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

அனுபவமுள்ள லொறி டிறைவர் தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும். மொடேர்ன் பேணிச்சர், 79/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 2517

றெய்லர்

தையல் வேலையில் நல்ல அனுபவமுள்ள றெய்லர் தேவை. வேலைக்கேற்ற வேதனம் அளிக்கப்படும் விபரங்களுக்கு: நாதன்ஸ் றெய்லறிங், கூட்டுறவு மாகாண வங்கியடி, புத்தூர். 2510

### விற்பனைக்கு

பக்கச்சி கிழக்கு தோட்டம் நூற்றெழுபது ஏக்கர் பத்து அல்லது கூடிய ஏக்கரைக் கொண்ட துண்டுகளாகப் பிரித்து விற்கப்படும். கண்டி றோட், பளை. பக்கச்சி சந்தியிலிருந்து முக்கால் கட்டை. தென்னை சிறு பயிர்கள், பாற்பண்ணை, கோழிப்பண்ணைக்கு ஏற்ற நிலம். அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியவர்களுக்கு அரிய சந்தர்ப்பம். தலான்ட் இன்வெஸ்ற்மென்ற்ஸ், 6, பெரிய தெரு, யாழ்ப்பாணம். 2506

நல்லூர் செட்டித்தெரு ஒழுங்கையில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்க. பொ. மாணிக்கவாசகர், ஆசிரியர், 29, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். 2512

## சென். ஜேம்ஸ் வெற்றி

காரைநகர் திங்கள்

சென். ஜேம்ஸ் சனசமூக நிலைய உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் இலங்கை-நோர்வே அபிவிருத்தித் திட்ட விளையாட்டுக் கழக உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் சென்ஜேம்ஸ் சனசமூக நிலையக் கோஷ்டி இலங்கை-நோர்வே அபிவிருத்தித் திட்ட விளையாட்டுக் கழக கோஷ்டியினரை 4—8 கோல்களால் வெற்றியீட்டினர். போட்டிக்கு திரு. என். யோசவ் மத்தியஸ்தம் வகித்தார்.

## உரும்பராய்-ஊரெழு பட்டின சபை
## சோலைவரி நிலுவை

உரும்பராய்-ஊரெழு பட்டினசபை வரியிறுப்பாளர்களுக்கு சொந்தமான அசையும் பொருட்களை பட்டின சபை நடுக்கட்டவேண்டிய தவிர்க்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. 1969ம் ஆண்டு 4ம் கந்தாயம் வரை ரூபா 51000/- நிலுவையாகவுள்ளபடியால் பட்டினசபை கடும் நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது. எனவே, சோலைவரி கட்டத்தவறியவர்கள் உடனடியாக பட்டின சபை அலுவலகத்தில் நிலுவைகளைச் செலுத்தி, சபையுடன் ஒத்துழைக்கும்படி கயவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

க. பத்மராசா,
தலைவர்,
பட்டின சபை,
உரும்பராய்-ஊரெழு.

பட்டினசபை
அலுவலகம்,
உரும்பராய்-ஊரெழு
உரும்பராய்.
14-11-70. 2554

தபால் கந்தோரில்

## ரூபா 53,000 திருட்டு

வெள்ளவத்தை, திங்கள்

மிரிஸ்ஸ தபாற்கந்தோரில் ரூபா 53,000 களவாடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கு கடமையாற்றிய தபாலதிபரே இப்பணத்தைத் தலைமைக் கந்தோருக்குத் தெரியாமல் தமது தினசரிக் கூற்றில் மறைத்து எழுதிவந்தாராம்.

சுமார் இரண்டு வாரங்களின் பின்னர் திடீர் பரிசோதகர்களின் முயற்சியால் இவரது களவு அம்பலமாகியது தற்போது விசாரணை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

## இடமாற்றம்

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் தபாற் கந்தோர் அதிபராகக் கடமையாற்றிய திரு. எஸ். தம்பிராசா தை மாதம் தொடக்கம் கண்டி தபாற் கந்தோருக்கு உத்தியோக உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## பண்டத்தரிப்புக் கிராமசபையின்
## பகிரங்க அறிவித்தல்

யாழ்ப்பாணம் டிஸ்றிக் வலிகாமம் மேற்கு பண்டத்தரிப்பு கோவில்பற்று இறையைச் சேர்ந்த நெட்டிலானை உள்ளாவி அடைப்பு ஐம்பதுபரப்பு 9 குளி (நெற்பரப்பு) வான்பயிர்கொண்ட காணியை எமது கிராமச் சபை விளையாட்டு மைதானமாக உபயோகிப்பதற்காக விலையாக வேண்டுவதற்கு தீர்மானித்துள்ளோம் என்பதை அறியத் தருகின்றேன்.

இக்காணியின் விபரங்கள் பின்வருமாறு:

காணியின்பெயர்: நெட்டியானை உள்ளாவி அடைப்பு.

காணியின் விஸ்தீரணம்: ஐம்பது பரப்பு

### பாதையின் விபரம்

மாதகல் பண்டத்தரிப்பு பகிரங்க வீதியில் இருந்த ஆரம்பமாகி பண்டத்தரிப்பு அரசினர் ஆஸ்பத்திரி வீதியால் சென்றுமேற்குநோக்கி தெற்குப் பக்கமாக வைத்திலிங்கம் இராமசாமியின் ஆதனத்துக்கும் வடக்குப் பக்கமாக அரசினர் ஆஸ்பத்திரியின் ஆதனத்துக்கும் இடையாகச் சென்று வடக்குப் புறமாகத் திரும்பி மேற்குப் பக்கம் - வைத்திலிங்கம் இராமசாமிக்குரிய ஆதனத்துக்கும் - சிவலோகர் வன்னித்தம்பிக்கும் உரிய ஆதனத்துக்கும் - கிழக்கு அரசினர் ஆஸ்பத்திரிக்குரிய ஆதனத்துக்கும் இடையாகச் சென்று பின் கிழக்குநோக்கி வடக்கு சிவலோகர் வன்னித்தம்பியின் ஆதனத்துக்கும் தெற்கு அரசினர் ஆஸ்பத்திரியின் ஆதனத்துக்கும் இடையாகச் சென்று - பின் வடக்கு நோக்கி மேற்கு சிவலோகர் வன்னித்தம்பிக்குரியஆதனத்துக்கும் கிழக்கு சூ. நாகமுத்துவுக்குரிய ஆதனத்துக்கும் மேற்குப் பக்கமாக சிவலோகர் வன்னித்தம்பிக்கும் ஏ. ஜே. இராசேந்திரத்தின் (சிங்கப்பூர்) தத்துவக்காரர் ஏ. தோமஸ்க்கும் உரியஆதனத்துக்கும் கிழக்கு-கத்தோலிக்க திருச்சபைக்கும் அரசினர் ஆஸ்பத்திரிக்குரிய ஆதனத்துக்கும் இடையாகச் சென்று யோசெப் பொன்ராசாவுக்குச்சொந்தமான நெட்டியானை உள்ளாவி அடைப்பை சேருகின்றது.

### காணியின் எல்லைகள் விபரம்

1. கிழக்கு வேலுப்பிள்ளை-சுப்பிரமணியத்துக்கும் உரிமையாளருக்கும்முடிக்குரிய காணியும்-றோமன் கத்தோலிக்க சபையின்

## இன்று இறுதி மோதல்

யாழ்ப்பாணம், செவ்,

யாழ்ப்பாண பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 'ஏ' பிரிவின் இறுதிப் போட்டி இன்று மாலை யாழ் விளையாட்டரங்கில் நடைபெறுகின்றன.

இந்த இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதிக் கொள்ளுகின்றன.

இந்தவருடம்நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி தோல்விஅடையாதது குறிப்பிடத்தக்கது.

இந்த இறுதிப்போட்டிக்கு வடமாகாண பிரதம கல்வி வித்தியாதிபதி திரு. சங்கரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (தே நி.)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாண பாடசாலை விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும்உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியின் இரண்டாம், மூன்றும் பிரிவுகளின் அரை இறுதிப் போட்டிகள் நாளையும்அதன் மறுதினமும் யா. விளையாட்டரங்கில் நடைபெற விருக்கின்றன.

இரண்டாம் பிரிவில் அரை இறுதிப் போட்டியில் கலந்துகொள்ளும் கல்லூரிகளின் விபரம் வருமாறு:-

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி. கொக்குவில்இந்துக் கல்லூரி.

மூன்றும் பிரிவில் அரை இறுதிப் போட்டியில்கலந்து கொள்ளும் கல்லூரிகளின் பெயர்கள் வருமாறு.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி. சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்,

இரண்டாம்பிரிவில், இறுதியாட்டம் இம்மாதம் 22-ம் திகதியும், மூன்றும் பிரிவில் இறுதியாட்டம் இம் மாதம் 21-ம் திகதியும் யாழ். விளையாட்டரங்கில்நடைபெறும்.

### சமமான முடிவு

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் ...

## நாவலர் நினைவு பேச்சுப் போட்டி முடிவுகள்

கோட்டை, திங்கள்

கொழும்பு விவேகானந்த மகாவித்தியாலய இல்லங்களிடையே நாவலர் நினைவு தினப் பேச்சுப் போட்டி இல்லங்களிடையே நடைபெற்றது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையால் மேற்படிவித்தியாலயத்தில் விழா கொண்டாடப்பட்ட போது முதலிடத்தைப் பெற்றவர்கள் பேசினர். முதல் மூன்று இடங்களையும்பெற்றவர்களுக்குப் பரிசுகளும் தராதரப் பத்திரங்களும் வழங்கப்பட்டன இல்லங்களிடையே நடைபெற்ற கட்டுரைப் போட்டியிலும் முதல் மூன்று இடங்களுக்கு வந்தவர்களுக்குப் பரிசில்களும் தராதரப்பத்திரங்களும் வழங்கப்பட்டன.

பேச்சுப்போட்டி முடிவு வருமாறு:-

மேற்பிரிவு: செல்வன். ப. சோமசுந்தரம் (நாவலர்) செல்வி. சு. சரோஜா (விவேகானந்தர்) செல்வி. செ. வசந்தா (நாவலர்)

மத்திய பிரிவு: செல்வி ம. பூபாலரஞ்சனி (இராமநாதர்) செல்வி இ இராஜேஸ்வரி (விவேகானந்தர்) செல்வன் தி. பஞ்சலிங்கம் (விவேகானந்தர்)

கீழ்ப்பிரிவு: செல்வி சு. இந்திராணி (இராமநாதர்) செல்வன் நா. லகுதாஸ் (நாவலர்) செல்வன் பா சியாமளன் (விபுலானந்தர்)

ஆரம்பபிரிவு: செல்வி செ உமாசாந்தி (விபுலானந்தர்) செல்வன் ச, மகேசுரன் (விபுலானந்தர்) செல்வி ஏ தில்லைநாயகி (இராமநாதர்)

கட்டுரைப் போட்டி

மேற்பிரிவு. செல்வன் மா அரியரத்தினம் (விபுலானந்தர்) செல்வி ச. கமலாதேவி (இராமநாதன்) செல்வன் கோ. மகேந்திரதாஸ் (இராமநாதர்)

கீழ்பிரிவு: செல்வி நா தேனுகா (நாவலர்) செல்வி ம. பொன்னம்மா (விபுலானந்தர்) செல்வி தி, நிர்மலா (இராமநாதன்)

0 0 0

புத்தளம், திங்கள்

நாவலர் வாரத்தை யொட்டி புத்தளம் இந்து இளைஞர் மன்றத்தினர் விவேகானந்த சபையினரின் ஆதரவில் அகில இலங்கை ரீதியிலான பேச்சுப்போட்டியை நடாத்தினர். புத்தளம் சைவ மண்டபத்தில் நடைபெற்ற பூர்வாங்கப் போட்டியின்போது திரு. சி. வே. மகேசவேலு எம். ஏ. (டிப்ளோமா) திரு. மு. சி. ஸ்ரீதயாளன் ஆசிரியர், திரு. செ. நடராஜா (கச்சேரி) ஆகியோர் நடுவர்களாகக் கடமையாற்றினர். மன்றச் செயலாளர் திரு. க கௌரிநாதன் போட்டிக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

போட்டிகளில் கீழ்ப்பிரிவில் ஞா. சகுந்தலாதேவி க மோகனகுமார் ஆகியோரும் மத்தியபிரிவில் க. சண்டேஸ்வரியும் முதலிடத்தையும் மேற்பிரிவில் நா. யசோதரா இரண்டாமிடத்தையும் பெற்றனர்

## 'உரிமைகளை இழக்க நாத்திகமே காரணம்'

பருத்தித்துறை, திங்கள்

"நாத்திகம் தலைதூக்கியதால் அக்கிரமங்கள் மலிந்ததுடன் தமிழினம் தனது உரிமைகளையும் இழக்க நேரிட்டது. இந்நிலையில் பரந்தன் இரசாயனத்தொழிலாளர் தமது தொழிற்சாலைக்கு முன்னால் ஒரு விநாயகர் ஆலயத்தை அமைக்க முன்வந்தது வரவேற்கத்தக்கது" என திரு குமாரசாமிப் புலவர் பரந்தன் ரசாயனத் தொழிற்சாலைக்கு முன்னால் நிறுவப்படவிருக்கும் விநாயகர் ஆலய அத்திவாரக்கல் நாட்டு வைபவத்திற்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார். மேற்படி தொழிற்சாலை உயர்தர உத்தியோகத்தர் உட்பட சகல தொழிலாளரும் இவ்வைபவத்திற் [illegible] கலந்து கொண்டனர்.

திரு எம். சிவலிங்கம் பேசுகையில், தமிழ்மக்[illegible] முன்னெப்பொழுதுமில்லாதவாறு இன்று சமயப்பற்றுடன் வாழவேண்டிய நிலைமை உருவாகியுள்ளதென்றும், ...பிரார்த்திப்பது மூலம் பல விஷயங்களைச் சாதிக்கலாமென்றும் ...

## வடக்கில் மூன்று புதிய மக்கள் வங்கிக் கிளைகள்

கிளிநொச்சி, திங்கள்

யாழ் மாவட்டத்தில் மிக விரைவில் 3 மக்கள்வங்கிக் கிளைகள் திறக்கப்படவிருப்பதாக அறியப்படுகிறது. தீவுப் பகுதியில் ஒன்றும் வலிகாமம் பிரிவில் ஒரு கிளையும் வடமராட்சியில் மற்றோர் வங்கிக் கிளையும் ஆரம்பிக்கப்படும்.

பொதுமக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றும் நோக்கத்துடனேயே அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துவருவதாகத் தெரிகிறது.

## கூட்டுறவு அடிப்படையில் கிராமிய வங்கிகள்

பருத்தித்துறை, திங்கள்

நெல்லியடி பட்டினசபை பகுதியையும் கட்டைவேலி கிராமசபைப் பகுதியையும் ஒன்றாக இணைத்து அப்பகுதிக்கான கூட்டுறவு ஆரம்ப சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது திரு. எஸ், உலகநாதர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கூட்டுறவுத் தலைமைக் காரியாலயப் பரிசோதகர்அரசாங்கத்தின் புதிய கூட்டுறவுஅமைப்பு முறை, கடமைகள் அதிகாரங்கள் ஆகியவற்றை விளக்கினார்.

இத்திட்டத்தின்படி இப்பொழுதுள்ள பலநோக்குக் கூட்டுறவு சமாஜங்களுக்குப் பதிலாக ஆரம்பசங்கங்கள் நிறுவப்படுமென்றும், கிராமங்களிலுள்ள சகல கூட்டுறவுச்சங்க அங்கத்தவரும் ஆரம்ப சங்கஉறுப்பினராகக் கருதப்படுவரென்றும், அங்கத்துவப் பணம் ரூபா 1/- என்றும் தெரிகிறது. மேலும் கிராமப்புற மக்கள் வீடு கட்டுவதற்கும். காணி வாங்கவும், விவசாயம் செய்யவும் கடன்வசதிகள் அளிக்கும் நோக்கத்துடன் ஆரம்ப சங்கங்களின் ஆதரவில் கிராமிய வங்கிகள் உருவாக்கப்படுமென்றும், அறியக்கிடக்கிறது. சகல கிராமப்புறக் கூட்டுறவுச்சங்கங்களின் பிரதிநிதிகளும் சேர்ந்தே ஆரம்பசங்கத்தின் 15 பேரைக் கொண்ட நிர்வாகசபையை இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்வரென்றும் தெரிகிறது.

## பதவி உயர்வு

பதுளை, திங்கள்

சிலோன் பொக்கே கம்பனியைச் சேர்ந்த திரு. லாசறஸ் பேரின்பநாயகம் 'பதல்கும்பற' மாவட்ட பகுதிக்கு உதவி மாவட்ட மேற்பார் வையாளராக நியமனம் பெற்றுள்ளார் இவர் யாழ் சென், பற்றிக்ஸ் கல்லூரி கொழும்பு சூசையப்பர் கல்லூரிபழைய மாணவராவார்,

## நாவலர்தினம் கொண்டாடுவர்

யாழ்ப்பாணம், செவ்

கைதடி சைவஐக்கிய சங்கமும் கைதடி மேற்கு சனசமூகநிலையமும் இணைந்து இம்மாதம் 21-ந் திகதி இரவு நாவலர் நினைவு தினம் கொண்டாடுகின்றனர். சொற்பொழிவுகளும் பக்திப்பாடல்களும் விழாவில் இடம்பெறும்.

## வலைத்திருட்டு

கொழும்புத்துறை திங்.

கொழும்புத்துறைப் பகுதியில் சிறகுவலைகள் அடிக்கடி திருட்டுப் போவதாக அறியப்படுகிறது.

## சிரமதானம்

கொழும்புத்துறை, திங்.

கொண்டலடி வைரவர் கோவில், சிரமதான மூலம் சுத்தம் செய்யப்பட்டது. திரு. ம. மதியாபரணம் தலைமைவகித்தார்.


## திருமண அழைப்பு

சண்முகசுந்தரம் — வசந்தகோகிலம்

உடுப்பிட்டி சந்தை வீதி
திரு, கிருட்ணசாமி,
திருமதி கிருட்ணசாமியின்
கனிஷ்ட புதல்வன்
சண்முகசுந்தரம்
(நீர்ப்பாசன பொறியியலாளர் கொழும்பு-7)
அவர்களுக்கும்

கொக்குவில்
ஸ்ரேசன் றோட்
"இராஜேஸ்வரி மாளிகை"
திரு. தா. க. சிவராமலிங்கம்
தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரி
வசந்தகோகிலம்
அவர்களுக்கும்

நிகழும் சாதாரண வருஷம் கார்த்திகை மாதம் 3-ம் திகதி (19-11-70) புதன்கிழமை இரவு 1 மணி 40 நிமிடம் முதல் 3 மணி 40 நிமிடம் வரையிலுள்ள கன்னிலக்கின சுபமுகூர்த்தத்தில் திருமணம் நடைபெறும். உற்றார், உறவினர் யாவரையும் வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றனர். 2556

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா
சோ—மனோரமா
நடித்த
செல்லப்பெண்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா
சோ—மனோரமா
நடித்த

# செல்லப் பெண்

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர்—லட்சுமி
ஜெயலலிதா —அசோகன்
நடித்த

# மாட்டுக்கார வேலன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி-சரோஜாதேவி
சோ-மனோரமா
நடித்த

# ஐந்து லட்சம்

## வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 10-00
போயா நாட்கள் 10-30 மெற்னி

கெப்பிட்டல் (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை)

தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணி

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 125-வது
உயர்ந்த சித்திரம்




சிவாஜிகணேசன் - சௌகார்ஜானகி
அசோகன், வாணிஸ்ரீ, சிவகுமார், பாரதி
வி. நாகையா — ஜி. சகுந்தலா
மற்றும் பலர் நடித்த

# உயர்ந்த மனிதன்

கதை வசனம்: ஜாவர் சீதாராமன். பாடல்: வாலி.
இசை: எம். எஸ். விஸ்வநாதன்.

விபரம்

1. கிழக்கு வேலுப்பிள்ளை-சுப்பிரமணியத்துக்கும் உரிமையாளருக்கும்முடிக்குரிய காணியும்-றோமன் கத்தோலிக்க சபையின் காணியும்
2. வடக்கு, செபஸ்ரி. பாவிலுக்குஉரிய காணியும்.
3. மேற்கு தம்பிஐயா-நல்லுவுக்கும் காலஞ் சென்ற சுவாம்பிள்ளை இன்னாசித்தம்பியின் உரிமையாளருக்கும், யோசேவ்-இராசேந்திரத்தின் மனைவி மேரி லில்லிபிராக்சிடாவுக்கும் உரிய காணியும்
4. தெற்கு- யோசெவ்-இராசேந்திரத்தின் மனைவி மேரி லில்லிபிராக்சிடாவுக்கும் உரிய காணியும்.

இக்காணி சம்பந்தமாக ஆட்சேபனைகள், தடைகள் இருப்பின் எல்லைக்காரர்கள் உரிமையாளர்கள் இவ்வறிவித்தல்கண்டு பதின்நான்கு நாட்களுக்குள் (30-11-70க்குள் எழுத்து மூலம் எனக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சி. சி. கனகசபாபதி ஜே.பி.
தலைவர், கிராம சபை.
பண்டத்தரிப்பு.
2557

## வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா ,பிரீபோயா 2-30
ஜெய்சங்கர்— கே. ஆர். விஜயா
நடித்த
### பொன்னான வாழ்வு

## ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 10-00
போயா நாட்கள் 2-30
ஜெமினி- சரோஜாதேவி
நடித்த
### பனித்திரை

REGAL
Jaffna
Daily 4-45, 7 &9-45
Poya days 4 shows
Elizabeth Taylor
in
TAMING OF THE SHREW

MANOHARA
Jaffna
Daily 4-45,7&9-45p.m.
Poya days 4 shows
Kerwin Mathews
in
CRACK IN THE WORLD

சமமான முடிவு

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் யாழ், இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற பி' பிரிவு ஆட்டம்; இரு கோஷ்டிகளும் ஆட்டமுடிவடையும் போது தலா 2—2 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

மேற்படி இரு கோஷ்டிகளும் மூன்று முறை அடுத்தடுத்து மோதியும் வெற்றி தோல்வி காணுததினுல் இந்தஆட்டமுடிவில் 'நாணயச்சுண்டலில்' கொக்குவில் இந்துக்கல்லூரி அரை இறுதிப் போட்டிக்கு விளையாடுவதற்கு தகுதிபெற்றது.

(தே. நி)

## நடனப் போட்டியில் பரிசு பெற்றனர்

யாழ்ப்பாணம், செவ்கைதடி இந்துவாலிபர்சங்கத்தின் 7-வது சைவ மாநாட்டில் நடைபெற்ற சைவசமய நடனப் போட்டியில் கைதடி விக்னேஸ்வர வித்தியாசாலை 1-ம் 3-ம் இடங்களையும் எருதிடல் த. க. பாடசாலை 2-ம் இடத்தையும் பெற்றன.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 7-45 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம்.

344 மீ அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம் 1-00 மாதர் கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் விருந்து

இரவு 6-10 இடைவேளை இசை 6-15 முத்திநெறி 6-35 பெண்ணுலகம், 7-00 திரை இசை, 7-15 சித்திரம், 7-45 வாத்திய இசை 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசை நிகழ்ச்சி, 10-30 செய்தி தொகுப்பு.

வாறு இன்று சமயப்பற்றுடன் வாழவேண்டிய நிலைமை உருவாகியுள்ளதென்றும், இறைவனைப் பிரார்த்திப்பது மூலம் பல விஷயங்களைச் சாதிக்கலாமென்றும் [...]ஞர்'

## இன்றைய பலன்

கார்த்திகைமாதம் 2-ந்திகதி (17-11-70)

மேஷம்- பொருளாதார நிலை சீரடையும். சிலர் வாழ்க்கையில் எதிர்பாராத வரவுக்கும் இடமுண்டு.

ரிஷபம்- பாதையில் பழுதுண்டு பகைவர்கள் காத்திருப்பர். செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும்

மிதுனம்- மனக்கோட்டை கட்டுவீர்கள். எதிர்பார்த்ததில் ஏமாற்றம். அபாயகரமான காரியங்களைத் தவிர்த்துக்கொள்ளவும்.

கடகம்- ஒளிமயமான சூழ்நிலை உருவாகும் வீட்டில் உள்ளவர்களின் அன்பும் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும்

சிம்ம - பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும். உதவிசெய்யப்போய் உபத்திரவத்தைத் தேடிக்கொள்வீர்கள்

கன்னி- நல்லதைச் செய்வீர்கள் நலன்பெருகும் பிரமுகர்கள் உங்களைத் தேடிவருவார்கள். சமூகத்தில் மதிப்பு உயரும்.

துலாம்- வாழ்க்கை புதிராகத் தோன்றும். ஆசாரக் குறைவுக்கு இடமுண்டு. அமைதிவேண்டும்.

விருட்சிகம்- ஏமாற்றத்தின் எதிரொலி பழிவாங்கும் உணர்ச்சியைத் தூண்டும் எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும்.

தனுசு- வாழ்க்கையில் தென்றல்வீசும். முதியவர்கள் உங்களுக்கு உதவுவதற்கு முன்வருவார்கள்,

மகரம்- சூழ்ச்சிவலை பின்னும். அடுத்துக்கெடுப்பவர்கள் அருகிலேயே இருப்பர். மனஅடக்கம் வேண்டும்.

கும்பம்- இன்று முன்னணியில் நிற்பீர்கள். நல்ல தீர்ப்பு வழங்கும் சந்தர்ப்பமும் ஏற்படலாம்.


மீனம்- எதிலும் ஒரு மாற்றத்தை விரும்புவீர்கள். மனதில் புதிய எண்ணங்கள் வட்டமிடும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

[...] கைகளை நிறைவேற்றும் நோக்கத்துடனேயே அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துவருவதாகத் தெரிகிறது.

1 மணி 40 நிமிடம் முதல் 3 மணி 40 நிமிடம் வரையிலுள்ள கன்னிலக்கின சுபமுகூர்த்தத்தில் திருமணம் நடைபெறும். உற்றார், உறவினர் யாவரையும் வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றனர்.
2556

# காய்ச்சல், சளிசுரத்தைச் சகித்துக் கொண்டு வீணுகச் சங்கடப்பட வேண்டாம்




# டிஸ்பிரின் உட்கொண்டு அதிதுரித நிவாரணம் பெறுங்கள்

உங்களுக்குக் காய்ச்சல், சளிசுரம் வந்தால்
★ ஓய்வெடுங்கள்
★ உடம்பைச் சூடாக வைத்திருங்கள்
★ நீர் ஆகாரம் சாப்பிடுங்கள்
★ 4 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை
2 டிஸ்பிரின் மாத்திரை உட்கொள்ளுங்கள்

காய்ச்சல், சளிசுரம் வரும் போது காய்ச்சலைக் குறைக்கும் மருந்துகளைக் கிரமமாகப் பாவிக்க வேண்டியிருக்கும். கிரமமாகப் பாவித்தால், சில மருந்துகள் பெரும் பாதக விளைவுகளைக் கொடுக்கக் கூடும். டிஸ்பிரின் முற்றுகக் கரைவதாகையால், கரையாத மற்ற மருந்துகள் போல, உடம்புக்குப் பாதகமான துகள்களை வயிற்றில் விட்டு வைப்பதில்லை. சில புதிய மருந்துகளிற் போல, பாதக விளைவுகளை ஏற்படுத்தும் சேர்பொருள்களும் டிஸ்பிரினிற் கிடையாது. எனவே எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.

டிஸ்பிரின் அதிதுரித நிவாரணம் தரும்
டிஸ்பிரின் மிக விரைவாகவும் முற்றுகவும் கரைந்து இரத்தோட்டத்திற் சீக்கிரம் செறிகிறது. இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிவதால் மிக வேகமாக உடம்பிற் செயலாற்றி உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது. அதனுல்தான் உலகமெங்குமுள்ள வைத்திய நிபுணர்கள் அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிறுர்கள்.

தலைவலி, நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமல், மாதவிடாய் வலி, வாத நோவுகளிலிருந்து அதிதுரிதமான அதிபாதுகாப்பான நிவாரணம் பெற டிஸ்பிரின் பாவியுங்கள்.

2 மாத்திரைகளை நீரிற் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.

குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி
P.0447

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்குப்பாகிஸ்தான் இயற்கை அழிவுகுறித்து உலகத்தலைவர்கள் கவலை

## ஐ. நா. உதவிக்கு யுதாண்ட் ஏற்பாடு

### பிரிட்டிஷ் மகாராணி அனுதாபம்

டாக்கா, நவம்பர் 1௦

**கிழக்குப் பாகிஸ்தானில் கடந்தவாரம் ஏற்பட்ட சூருவளி, கடல் கொந்தளிப்பு ஆகியவற்றினுல் ஏற்பட்டுள்ள அழிவுகளை செப்பனிடவும், உயிர்களையும், உடமைகளையும் இழந்த மக்களுக்கு நிவாரணம் அளிக்கவும் உலக நாடுகள் பலவும் பரிவுடன் முன்வந்துள்ளன.**

ஐ நா பொதுக் காரியதரிசி, அதிபர் யாஹ்யாகானுக்கு அனுப்பியுள்ள பரிவுச் செய்தியொன்றில் ஐ நா ஸ்தாபனமும், அதனை ஏனைய சபைகளும் முடிந்த அளவில் உதவிகள் புரியக் காத்திருப்பதாக அறிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் நிக்ஸன், பாகிஸ்தான் அதிபர் யாஹ்யாகானுக்கு அனுதாபச் செய்தியொன்றை அனுப்பியுள்ளார் அமெரிக்கா எந்த அளவில் உதவிகள் வழங்கவேண்டும்என்பதை அனுமானித்து அறிவிக்கும்படி அதிபர் நிக்ஸன் பாகிஸ்தானிலுள்ள யு எஸ் தூதருக்கு அறிவித்துள்ளார் பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. ஹீத்தும் பாகிஸ்தானிலுள்ள பிரிட்டிஷ் தூதருடன் உதவிகள் பற்றி ஆலோசனைகள் ஆரம்பித்துள்ளார், பிரிட்டிஷ் எலிஸபெத் மகாராணியும் அதிபர் யாஹ்யாகானுக்கு அனுதாபச் செய்திகள் னுப்பியிருக்கிருர் பாப்பாண்டவரும் அனுதாபம் தெரிவித்துள்ளார்.

நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் ஏற்கனவே இரண்டு லட்சத்து 25 ஆயிரம் ரூபாய்க்கான உதவிகளை அனுப்பியுள்ளது. இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி ஏற்கனவே ரூ 5 லட்சம் பாகிஸ்தானுக்கு அனுப்பியுள்ளார்.

சடலங்களை மீட்பதிலும், உயிர் தப்பியுள்ளவர்களுக்கு உதவுவதிலும் ராணுவமும் கடற்படையும் ஈடுபடுத்தப் பட்டுள்ளன

பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் கொள்ளைநோய் வராமல் தடுப்பதற்கான அவசர நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. உலகநாடுகள் பலவற்றிலுமுள்ள செஞ்சிலுவைச் சங்கங்கள் உதவி அளிப்பதற்கு முன்வந்திருக்கின்றன.

## 3 லட்சம் மக்கள் பலி?

கடைசியாகக் கிடைத்த ஒரு அதிகாரபூர்வமற்ற தகவலின்படி கிழக்குப் பாகிஸ் [illegible]

## புற்றுநோயைத் தீர்க்கும் புரட்சிகரமான மருந்து

லண்டன், நவ. 16

புற்றுநோயைக் கட்டுப்படுத்தும் புரட்சிகரமான புதிய மருந்து ஒன்றைப் பிரிட்டிஷ் வைத்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிருர்கள்.

இந்த மருந்து எலிகளில் பரிசோதிக்கப்பட்ட போது அது புற்றுநோய்க் கழலைகளின் வளர்ச்சியை உடன் தடுத்துவிடும் சக்திவாய்ந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இம்மருந்து தற்சமயம் பிரிட்டனிலுள்ள புற்றுநோயாளிகளில் பரிசோதிக்கப்பட்டு வருகிறது.

லண்டனிலுள்ள இம்பீரியல் புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த வைத்திய விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் இம்மருந்து, மனிதர்களில் லூகேமியா எனப்படும் இரத்தப் புற்றுநோயைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் படைத்ததென ஏற்கனவே அறியப்பட்டது. இதனையடுத்துப் புற்றுநோய்க் கழலைகளுக்கு எதிரான இதன் பிரயோகம் பற்றி ஆராயப்பட்டது

புற்றுநோய்க் கழலைகள் வளர்ச்சியடைந்து நுண்ணிய உள்ளுறுப்புகளில் தாவும்பொழுதுதான் இது ஒரு மரண பயங்கர வியாதியாகிறது சில சமயங்களில் ஆரம்பக் கழலைகளால் உபிராபத்து நேர்ந்துவிடுவதில்லை. சுவாசயப் புற்றுநோயுள்ள எலிகளுக்கு இந்த மருந்து அளிக்கப்பட்டதும் ஆரம்பக் கழலைகளின் வளர்ச்சி கட்டுப்படுவதுமன்றிப் புற்றுநோய்க் கிருமிகள் பரவாமலும் இது தடுத்துவிடுகிறது.

இந்த மருந்து இப்பொழுது புற்றுநோயாளிகளில் பிரயோகிக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டுவருகிறது புற்றுநோய்க் கழலைகளைக் கட்டுப்படுத்தி, இக்கொடிய நோயிலிருந்து மனிதன் குணம் அடைய இம்மருந்து நிச்சயம் வழிவகுக்குமென ஆராய்ச்சியாளர்கள் நம்புகிருர்கள்

## சிரியா அதிபர் [illegible]

## 'ஈழத்து கவிஞர்களை ஊக்குவிக்க வேண்டும்'

பருத்தித்துறை, திங்கள்

'கவிதை என்பது ஏட்டுச் சரக்கல்ல. கவிஞனின் உள்ளத்தில் பொங்கியெழும் உணர்ச்சியலைகளைப் படம்பிடித்துக் காட்டவேண்டும் கவிதை, சொல்லோவியம் மிக்க கவிதைக்கலை மிக மென்மையும் தூய்மையும் வாய்ந்தது. எனவேதான் கம்பனின் பாடல்கள் கம்பசித்திரம் எனப்படுகிறது. ஆனுல் கவிதையென்ற பெயரால் வெளிவரும் அர்த்த புஷ்டியற்ற விளம்பரங்களை வாசகர் தரம்புரிந்து தள்ள வேண்டும்.'

இவ்வாறு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அரசியல் - வரலாற்று மன்றத்தில் உரைநிகழ்த்திய கவிஞர் காரை செ சுந்தரம்பிள்ளை கூறினுர், திரு ஆர். இராசேஸ்வரன் தலைமை தாங்கினுர். தொடர்ந்து அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது;

ஈழத்தில் தலைசிறந்த கவிஞர்கள், உள்ளனர். ஆனுல் அவர்களுட் பலர் குடத்துள் விளக்காக உள்ளனர் அவர்களை ஊக்குவிப்பதில் பத்திரிகைகளுக்கும் விமர்சகருக்கும், வாசகப் பெருமக்களுக்கும் பெரும் பங்குண்டு.

சூழலுக்கேற்ற சுவைமிக்க கருத்துக்களையும், உள்ளூர் பொருட்களையும் உவமைகளாகக் கொண்டு சாதாரண மக்களின் பிரச்சினைகளைப் பொருளாகக் கொண்டும் எழும் கவிதைகளிலேயே பொதுமக்கள் இன்பம்பெற முடியும்.

பல உள்ளூர்க் கவிஞரின் படைப்புகளிலும் மேற்கோள் காட்டி திரு சுந்தரம்பிள்ளை பேசினுர் திரு எஸ். தர்மகீர்த்தி நன்றி கூறினுர்.

## புதிய கழகம்

சாய்ந்தமருது, திங்கள்

சாய்ந்தமருதில் 'மருதல்' என்ற பெயரில் புதிய விளையாட்டுக்கழகம் ஒன்று இளைஞர்களால் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:-

தலைவர் ஜனுப் எம் ஐ எம் பாரூக் [illegible] ஜனுப் எம் [illegible] செயலாளர் ஜனுப் ஏ எம் [illegible]

## நாவலர் வாரம்

யாழ்ப்பாணம், செவ்.

நாவலர் மகாவித்தியாலயத்தில் நாவலர் வாரத்தை மிகப்பரந்த அடிப்படையில் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வித்தியாலய மாணவர்களை மேற்பிரிவு, மத்திய பிரிவு, கீழ்ப்பிரிவு ஆரம்ப பிரிவு என 4 பிரிவுகளாக வகுத்து ஒவ்வொருபிரிவுக்கும் பேச்சுப்போட்டி கட்டுரைப்போட்டி, திருமுறைஓதற் போட்டி சமய அறிவுப்போட்டி ஆகிய 4 போட்டிகளை நடத்தி முதல் மூன்று இடங்களையும் பெறும் மாணவர்களுக்குப் பரிசுவளங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன,

இப் பரிசுகள் வடமாநில வித்தியாதிபதி திரு. வே சங்கரலிங்கத்தின் தலைமையில் இம்மாதம் 22-ம் திகதி நடக்கவிருக்கும் நாவலர் விழாவில் வடமாநிலப் பிரதமவித்தியாதிகாரி திரு. ஏ. சந்திரசேகரம்பிள்ளையினுல் வழங்கப்படவிருக்கின்றன. வழமைபோல 21-ம் திகதி நாவலர் குருபூசையும் மகேசுரபூசையும் பாடசாலையில் நடைபெறும் 22-ம் திகதி நாவலர் நினைவு விழா மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்படும். பல போறிஞர்களின் சொற்பொழிவுகள், மாணவர் கலை நிகழ்ச்சிகள், நடனங்கள் நாடகங்கள் என்பன நாவலர் நினைவு விழாவில் இடம் பெறவிருக்கின்றன.

## குழந்தைகளைப் பாதிக்கும் புதிய நோய்

யாழ்ப்பாணம். செவ்.

யாழ்ப்பாணத்தில் புதுவகை நோய் ஒன்று குழந்தைகளைத் தாக்கிவருகிறது. இது ஒருவகை தோல் நோய் என்று கருதப்படுகிறது. கை, கால் முதலிய பகுதிகளில் சிறிதாகத் தோன்றும் கட்டிகள் பெருத்துவருகிறது இந்தக்கட்டிகளின் மேல் இரத்தம் [illegible]டிகிறது.

சாவகச்சேரி, மிருசுவில் [illegible] ஆகிய இடங்[illegible] வைத்தியசாலைக[illegible] இந்நோய் [illegible]

## ரஷ்யாவில் மனித உரிமை

லண்டன், நவ 16

சோவியத் நாட்டில்மனித உரிமைகள் பற்றி ஆராய்வதற்காக அந்த நாட்டின் பிரபல அணு இயல் விஞ்ஞானி ஒருவர் கமிட்டியொன்றை நிறுவியுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது. இந்தக் கமிட்டி சோவியத் சட்டதிட்டங்களுக்கு அமையவே செயல்படும் என்று அவர் அறிவித்திருக்கிருராம்.

— —

கவுத்தமாலாவில்

## அந்நியகக்கப்பல் மீது விமானத்தாக்குதல்

கவுத்தமாலா ஸிட்டி நவ 16

கவுத்தமாலா நாட்டின் கடல் பிரதேசத்துக்குள் அத்துமீறிப்பிரவேசித்ததாகக் கூறப்படும் சில கப்பல்கள் மீது அந்த நாட்டு விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன. இந்தக்கப்பல்கள் தம்மை அடையாளம் காட்டிக் கொள்ளமறுத்ததின் காரணமாகவே இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

## புகார்

யாழ்ப்பாணம், செவ்

பள்ளிக் கூடத்துக்குச் சென்று கொண்டிருந்த தன்னை காரால்மோதியதாகவும், பின்னர் காரில்தூக்கிக் கொண்டுபோய் வீட்டில் வைத்துத் தாக்கியதாகவும் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் பயிலும் செ ஸ்ரீகாந்தன் என்னும் மாணவர் யாழ்ப்பாணப் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

ராஜேந்திரம் என்பவரே தன்னை இப்படிச்செய்ததாக பொலிஸில் புகார் செய்துள்ளார். ஸ்ரீகாந்தன் என்ற அந்தமாணவரின் தகப்பனுர் அ செல்லத்துரையும்பொலிஸில் இது சம்பந்தமாக புகார் செய்துள்ளார்.

## ஓய்வுபெறுகின்றுர்

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நீண்டகாலமாக ஆசிரியராகப் பணியாற்றி வரும் திரு எம். ஏ. கந்தையா அடுத்த மாதத்துடன் ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறுகின்றுர். கல்லூரி மாணவர்கள் இவருக்குப் பிரிவுபசார விழாவொன்றை நடாத்தவும், மலர் வெளியிடவும் ஏற்பாடு செய்துவருகின்றனர்.

## கால்நடைகள் கஷ்டம்

அம்பன், திங்கள்

[illegible]

## 'வியட்னும் போரை 90 வீத அமெரிக்கர்எதிர்க்கின்றனர்'

பருத்தித்துறை, திங்கள்

''அமெரிக்க ஆயுத உதவி இல்லாவிடின் தென்கிழக்காசிய நாடுகளில் கம்யூனிசம் பரவி விடுமென்று இன்று பரவலாக அமெரிக்காவில் அபிப்பிராயம் நிலவியபோதிலும் 90 வீதம் அமெரிக்கமக்கள் வியட்னும் போரை எதிர்க்கின்றனர்! எனவே இப்போர் நிறுத்தப்படாவிடின் ஜனுதிபதி நிக்சன் தேர்தலில் தோல்வியடைவார்.''

இவ்வாறு சர்வதேச இளைஞர் விவசாய அமெரிக்கப் பிரதிநிதி திரு.நோமன்ஆர், சுவான், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவர் மன்றத்தில் நேற்றுமுன்தினம், உரைநிகழ்த்துகையிற் குறிப்பிட்டார் கல்லூரி அதிபர் திரு: க. சிவசிதம்பரம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியதாவது:

இந்நாட்டிலுள்ளது போல அமெரிக்காவில் இலவசக் கல்வி கிடையாது. ஆனுல் அங்குள்ள பல்கலைக்கழகங்களின் விடயங்களில் கல்வியமைச்சோ, அரசாங்க உயர்உத்தியோகத்தரோ, தலையிடுவதில்லை: அங்குள்ள கல்வி முறையும் உலகவளர்ச்சிக்கேற்ற விஞ்ஞானக் கல்வியையே பெரிதும வலியுறுத்திவளர்க்கிறது ஆகையால் அங்கு வேலையில்லாத் திண்டாட்டமும் இல்லை.

## 'கீதையை புரிந்து கொள்ள மனப்பக்குவம் வேண்டும்'

— கி. வா. ஜ.

வெள்ளவத்தை, ஞாயிறு

'கீதை மிகவும் பெருமை வாய்ந்த ஒன்ருகும். அதனைப் படித்து அந்த அமுதத்தைக் கடைந்து கீதை அமுதமாகத் தந்துள்ளார் திரு. செ. தனபாலசிங்கன். அவர் தமிழுக்கு ஆற்றியுள்ள பணி அளப்பரியது அனேகமான சமய நூல்களை அவர் எழுதியுள்ளார்'

இவ்வாறு தமிழகத்திலிருந்து வருகை தந்துள்ள தமிழறிஞர் திரு. கி. வா. ஜகந்நாதன் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற செ. தனபாலசிங்கனின் 'சீதை அமுதம்' வெளியீட்டு விழாவில் கலந்து சிறப்புரையாற்றுகையில் கூறினுர்

திரு. கி. வா. தொடர்ந்து பேசியதாவது:-

கீதையைப் புரிந்துகொள்பவர்களுக்கு நல்ல மனப் பக்குவம்வேண்டும். எந்த ஒன்றையும் பக்குவமடையாமல் புரிந்துகொள்ளமுடியாது. உதாரணமாக தமிழ் நாட்டில் பெண்களுக்குச் சிறுவயதிலேயே திருமணம் நிச்சயித்து விடுகிருர்கள். கொஞ்சம் பருவம் வந்த மாப்பிள்ளைப்பையன் மணம் பேசிய நாட்களில் அந்தப் பெண்ணைப் பிடித்து ஸ்பரிசித்துவிட்டால்அவள் சிணுங்கிக்' கொண்டு ஓடிவிடுவாள் அப்போது சிறுமிதானே! ஆனுல் பருவம் வந்ததும் அதே ஸ்பரிசம் மீண்டும் மீண்டும் கிடைக்காதா என்று ஏங்குவாள். கிடைக்கும் போதெல்லாம் 'களுக்' 'களுக்' என்று சிரிப்பாள். இது அவள் எதையோ புரிந்துகொண்டதற்கான அர்த்தம், மனப்பக்குவமும் இப்படித்தான்

ஒவ்வொரு நிலையிலுள்ளவர்களுக்கு அந்தந்த நிலையிலுள்ள விஷயங்களைத்தான் புரிந்துகொள்ள முடியும். அதற்கு மேல் எம்மால் எதிர்பார்க்கவும் முடியாது'

திரு. செ. தனபாலசிங்கன் நன்றி தெரிவிக்கையில், 'எவ்வித அச்சுப்பிழையுமின்றி என் நூலை அச்சேற்ற வேண்டுமென்பதே எனது ஆசை. இந் நூலை அழகாக அச்சுக்கோர்த்தவருக்குப் பரிசு வழங்கியதன் மூலம் இனிமேல் வெளிவரும் புத்தகங்களைப் பிழைகளின்றி வெளியிட இது உதவியாக இருக்கும். கீதை ஒரு பெரிய கடல். படிக்கப் படிக்கப் புதிய புதிய கருத்துக்களும் அளப்பரிய ஆனந்தமும் தோன்றும்' என்ருர்.

## தங்கக் கட்டிகளுடன் கைது

கொழும்பு திங்கள்

பன்னிரண்டு தங்கக் கட்டிகளும் நூற்று ஐம்பது தங்கப்பவுண் நாணயங்களும் 35 ஆயிரம் ரூபாய்க்கான நோட்டுக்களும் வைவிருந்ததாக கதிர்காமத்தி[illegible]

## கிராமசேவகர் இடமாற்றம்

பருத்தித்துறை, திங்கள்

வடமராட்சி தெற்கு, மேற்குக் காரியாதிகாரி பிரி[illegible]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மக்கள் பலி?

கடைசியாகக் கிடைத்த ஒரு அதிகாரபூர்வமற்ற தகவலின்படி கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்ட சூருவளியாலும், கடல்கொந்தளிப்பாலும் சுமார் 3 லட்சம் பேர் பலியாகியிருக்க வேண்டும் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது. அதிகாரபூர்வமான தகவலின்படி 41 லட்சம் பேர் பலியாகியிருக்கலாம் என்று கணக்கிடப்பட்டுள்ளது ஆனால் இது இன்னும் அதிகரிக்கலாம் என்று கருதப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கானதீவுகளில் நான்கு தீவுகளில் ஒருவர்தானும் உயிர் தப்பவில்லையென்று கருதப்படுகின்றது

விவசாயக் குடும்பங்கள் ஆயிரக்கணக்கில் கடல் அலைகளினால் அடித்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள், வயற்காடுகள் பிணக்காடுகளாகக் காட்சியளிக்கின்றன. இன்னமும் தேங்கிநிற்கும் நீர்நிலைகளில் பிணங்கள் மிதந்து வருகின்றனவாம். பல இடங்களில் மக்கள் ஆயிரக்கணக்கில் பெரும் கிடங்குகளில் ஒன்ருகப் புதையுண்டுபோயிருக்கிறார்கள்.

மீட்பு வேலைகளில் ஈடுபட்டிருந்த கப்பலொன்று மூன்று நாட்களாக பாறைகளில் தொங்கிக்கொண்டிந்த மக்கள் பலரை மீட்டிருக்கின்றது. கடலில் ஏராளமான சடலங்கள் மிதப்பதைக் கண்டதாக இந்தக் கப்பலின் மாலுமிகள் தெரிவித்தனர்.

## யாஹ்யா. நேரில் பார்க்கிறார்

சூருவளியினாலும், கடல் கொந்தளிப்பினாலும் பாதிக்கப்பட்ட இடங்களில் நிவாரண வேலைகள் நடப்பதை அதிபர்யாஹ்யாகான் நேரில் பார்வையிட்டு வருகிறார் இன்று அப்பிரதேசத்தில் விமானத்தில் பறந்து பார்வையிட்டார்.

### இடமாற்றம்

கிளிநொச்சி, திங்கள்

உரும்பராய் இந்துக்கல்லூரியிலிருந்து திருமதிவிஜயரத்தினம் ஆசிரியை கிளிநொச்சி மகாவித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்

திரு. ஏ.தர்மலிங்கம்புதிய பட்டதாரிகள் நியமனத்தில் தெரிவு செய்யப்பட்டு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நியமிக்கப்பட்டுள்ளார்.

... களுக்கு எதிரான இதன்

## சிரியா அதிபர் அத்தாஸி விடுதலை

டமாஸ்கஸ், நவ, 16

சிரியாவில் ராணுவப் புரட்சிமூலம் ஆட்சியைக் கைப்பற்றிய பாதுகாப்பு அமைச்சர் தடுப்புக்காவலில் வைத்திருந்த பல தலைவர்களை விடுதலை செய்திருக்கிறார். அதிபர் அத்தாஸியும் விடுவிக்கப் பட்டிருப்பதாகத் தெரிகின்றது. புதிய அரசு ஒன்றை அமைப்பதற்கான சமரசத்திட்டம் ஒன்றுக்கு பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அஸன், ஜெனரல் அத்தாஸியுடன் உடன்பாடு செய்துகொண்டதாகத்தெரிகின்றது.

சிரியாவில் புரட்சி மூலம் ஆட்சி கைப்பற்றப்பட்டதற்கு எதிராக பல இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. பலர்கைது செய்யப்பட்டார்கள்.

### எகிப்தில் புதிய மந்திரிசபை

எகிப்திய பிரதம மந்திரி டாக்டர் பவுஸி ராஜினுமா செய்திருக்கிறார். அவரை உடனடியாகப் புதிய மந்திரி சபையொன்றை அமைக்கும்படி அதிபர் சதாத்கேட்டுள்ளார்.

தமது மந்திரி சபையை மாற்றி அமைப்பதற்கு பிரதம மந்திரி விரும்பியதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

......

## ஐப்பசி வெள்ளி

யாழ்ப்பாணம், செவ்

கோப்பாய், உரும்பராய் நீர்வேலி, கரந்தன் ஆகிய கிராமங்களுக்கு மையமாகவுள்ள பூதரேஸ்வரர் ஆலயத்தில் தொண்டர்சபை ஐப்பசிக்கடைசி வெள்ளிக்கிழமையைச் சிறப்பாகக் கொண்டாடியது.

465 ஆண்டுகளுக்கு முன்பு ஒல்லாந்தர்தமிழ் மன்னர்களது கோட்டை, கோயில்களைத்தரைமட்ட மாக்கிய போது கொத்தம்பியார்களால் மேற்படி கோயில் அமைக்கப்பட்டது.

கதிர்காமக்கந்தனது வேல் ஒன்றை ஓர் முருகபகதர் மேற்படி ஆலயத்தில் ஸ்தாபித்துள்ளார். கூட்டுப் பிரார்த்தனை, பூஜை, ஆராதனைகளைத் தொண்டர்கள் சிரத்தையுடன் பிரதிவெள்ளிக்கிழமைதோறும்செய்து வருகின்ருர்கள். (குவி ம(

## அரசாங்க அதிபர்களின் கருத்தரங்கு

### பிரதமர் கலந்துகொள்வார்

கோட்டை, திங்கள்

இவ்வாரம் கொழும்பில் நடைபெறவிருக்கும் அரசாங்க அதிபர்களின் நான்கு நாள் கருத்தரங்கில்பிரதமர் திருமதி பண்டாரநாயகா கலந்துகொள்வார்.

இம்மகாநாட்டின் அடிப்படை நோக்கம் அதிகாரவர்க்கத்திற்கும், பொதுமக்களுக்குமிடையுள்ள தொடர்பை பலப்படுத்துவதாகும்; விலைக்கட்டுப்பாட்டுவிஷயம்பற்றி ஆராயப்படும்

மற்றும் இம்மகாநாட்டில் விவாதிக்கப்படும் முக்கிய விஷயங்களாவன:

உரம், விதைநெல், டிராக்டர்கள் ஆகியன உட்பட விவசாயச் சாதனங்களின் விநியோகமும் அவற்றுக்கான கடன் வசதித்திட்டமும்.

அபிவிருத்தித் திட்டமிடப்பட்ட இடங்களில் முடிக்குரிய காணிகள் அத்துமீறப்படின் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள்.

கச்சேரி நிர்வாகத்தைப் பிரித்தளித்தலும் அரசகருமமொழிக்கொள்கை அமுலும்.

திருவாளர்கள் ரி. பி. இலங்கரத்ன, ரி.பி சுபசிங்கா, ஹெக்டர் ஹொப்பகடுவ, மைத்திரிபால சேனநாயக்கா, பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா ஆகியோர் அரசாங்க அதிபர்களுக்கு உரைநிகழ்த்தும் மற்றும் அமைச்சர்களாவார்கள்.

... ...

### பொழுதுபோக்குச் சங்கம்

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சியில் வங்கி ஊழியர் பொழுது போக்குச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. சங்கத்தின் தலைவராக திரு எஸ் ஜெகராசாவும், செயலாளராக எஸ் குகநாதனும், பொருளாளராக ஏ செல்லத்துரையும் தெரிவு செய்யப்பட்டனர்.

...வோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:-

தலைவர் ஜனுப் எம் ஐ எம் பாரூக், உபதலைவர் ஜனுப் எம் ஐ எம்ஜெமீல். செயலாளர் ஜனுப் ஏ எல் சிறுவத்தீன், உபசெயலாளர் ஜனுப் நிஜாமுத்தீன் பொருளாளர் செல்வன் எம் ஐ எம் சாமித்தம்பி, உபபொருளாளர் ஜனுப் ஏ எச் ஏ வதூத், வி கப்டன் ஜனுப் எம் ஐ எம் கூல்அப்புக்காத்து மற்றும் 29 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

...களின் மேல் இரத்தம் ...டிகிறது.

சாவகச்சேரி, மிருசுவில் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள வைத்தியசாலைகளில் இந்நோய் காரணமாக பல குழந்தைகள் சிகிச்சை பெற்றுவருகிருர்கள். இந்நோய்களைத் தீர்ப்பதற்குரிய ஊசி மருந்துகள் இல்லாத காரணத்தால் தகுந்த சிகிச்சை அளித்து இந்நோயைக் கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதாக டாக்டர்கள் எமது நிருபரிடம் தெரிவித்தனர். (குவி ம:

...வொன்றை நடாத்தவும், மலர் வெளியிடவும் ஏற்பாடு செய்துவருகின்றனர்.

......

### கால்நடைகள் கஷ்டம்


அம்பன், திங்கள்

சில தினங்களுக்கு முன்னர் இங்கு பெய்த கடுமழையால் குடத்தனைக் கிராமசபையின் பொது மேய்ச்சல் தரவையில் உப்புநீர் தேங்கி நிற்கின்றது. இதனுல் புற்தரவை நாசமானதுடன் கால்நடைகளும் மேய்ச்சலின்றி பெரிதும் அவதிப் படுகின்றன.





# மெற்றசிஸ்டொக்ஸ்'ஆர்




குத்தும், உறிஞ்சும் சகல பூச்சிகளையும் கொன்றெழிக்க வல்லது மெற்றசிஸ்டொக்ஸ். அது ஒரு தொகுதிப் பூச்சி கொல்லி. தெளித்ததும் அது பயிர்ச் சாற்றுடன் சேர்ந்து, காய்கறியைத் தாக்கும் அழுக்கணவன், ஒட்டுண்ணி, வெண் ஈ, பனிப்பூச்சி, பேன், தென்னையைத் தாக்கும் செவ்வண்டு, அனைத்தையும் அழிக்கும்.

மெற்றசிஸ்டொக்ஸ்—ஒரு பேயர் தயாரிப்பு. அது நம்பிக்கையான, விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள் - பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்.

உற்பத்தியாளர்:
பேயர்,
ஜெர்மனி.

இலங்கையில் விநியோகிப்போர்:
ஹெக்கெம் லிமிட்டெட்,
400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10.


கொழும்பு திங்கள்

பன்னிரண்டு தங்கக் கட்டிகளும் நூற்று ஐம்பது தங்கப்பவுண் நாணயங்களும் 35 ஆயிரம் ரூபாய்க்கான நோட்டுக்களும் வைவ்திருந்ததாக கதிர்காமத்தித் ஒருவர் கைதுசெய்யப் பட்டிருக்கிறார்.

தெய்வானையம்ம கோவிலைச் சேர்ந்த சாமியார் என்று கருதப்படும் இவர் இந்திய வம்சாவளியினரான தற்காலிக வாசி என்றும் தெரிய வந்துள்ளதாம்.

(சி.பி.ஏ)

— —

## மடத்தில் இறந்துகிடந்தார்

வல்வெட்டித்துறை, திங்கள்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கே. கந்தன் என்னும் வயோதிபர் தொண்டமானுறு செல்வச்சந்நிதி கோவில் மடமொன்றில் இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

கிராமசேவகர் திரு. வி. ஜெயவீரசிங்கம் சாட்சியங்களை ஆஜர் படுத்தியபின் மரணவிசாரணை அதிகாரி திரு சி தாமோதரம்பிள்ளை இயற்கை மரணம் எனத் தீர்ப்பளித்தார் சடலத்தை எவரும் ஏற்க முன்வராமையால் அரசாங்க செலவில் அடக்கம் செய்யுமாறுமரண விசாரணை அதிகாரி கிராம சேவகருக்கு உத்தரவிட்டுள்ளார்.

— —

## பஸ் சேவை சீர்கேடு

அம்பன், திங்கள்

நாகர் கோயில் பஸ்சேவை சீர்கேடான நிலையிலுள்ளது இந்த சேவை மந்திகையூடாக ஒரு நாளுக்கு ஆறு தடவைகள் நடைபெறுவது வழக்கம் சில நாட்களில் ஒருதடவையுடன் பழுதடைந்து நின்று விடுகின்றது.

பழைய பஸ் சேவையில் விடப்பட்டிருப்பதே இதற்குரிய காரணமாகும் பஸ் சேவை அதிகமாக பாதிக்கப்படுவதால் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் மற்றும் பிரயாணிகளும் பெரிதும் கஷ்டமடைகின்றனர்.

——

## தீர்மானம்

மட்டுவில், திங்கள்

பூமிசாஸ்திர ஆசிரியர் ஒருவரை நியமிக்கவேண்டும் என்று அரசினரைக் கோரும் தீர்மானம் ஒன்று மகாவித்தியாலய பெற்ருர் ஆசிரிய சங்கக் கூட்டத்தில நிறைவேற்றப்பட்டது.

## கிராமசேவகர் இடமாற்றம்

பருத்தித்துறை, திங்கள்

வடமராட்சி தெற்கு, மேற்குக் காரியாதிகாரி பிரிவிலிருந்து பின்வரும் கிராம சேவகர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

திரு. கே. பொன்னையா கரவெட்டி கிழக்கிலிருந்து கரவெட்டி வடக்கிற்கும், திரு. கே. இரத்தினசிங்கம் கரவெட்டி வடக்கிலிருந்து கரவெட்டி கிழக்குக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். திரு. வீ சேதுநாயகம் புலோலி தெற்கிலிருந்து செம்பியன்பற்றுக்கு செய்யப்பட்ட மாற்றமும் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சி வடக்கு, கிழக்குக் காரியாதிகாரி பிரிவிலிருந்து, துன்னாலை தெற்குக்கு வல்வெட்டித்துறையிலிருந்து மாற்றப்பட்ட திரு. என். அம்மையப்பபிள்ளையின் மாற்றமும் பொலிகண்டியிலிருந்து வல்வெட்டித்துறைக்கு மாற்றப்பட்ட திரு. கே தணிகாசலம் பிள்ளையின் மாற்றமும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன. வலிகாமம் கிழக்குக் காரியாதிகாரி பிரிவிலுள்ள பத்தமேனி கிராம சேவையாளர் திரு. திரு. ஏ. சீ. ரி. கிருஷ்ணராசா உரும்பராய்க்கும், கோப்பாய் வடக்கு கிராம சேவையாளர் திரு. எஸ். யோகலிங்கம் புத்தூர் மேற்குக்கும், ஊரெழு கி. சே. திரு. வி. சின்னத்துரை கோப்பாய் வடக்கிற்கும், புத்தூர் மேற்கு கி. சே. திரு. கே அமிர்தலிங்கம் பத்தமேனிக்கும் இடமாற்றப்பட்டுள்ளனர். பூநகரி நல்லூர் கி. சே. திரு. எஸ் உலகநாதபிள்ளை சுன்னுகத்திற்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

——

## ஆசிரியர்களை மாணவர் தோற்கடித்தனர்

உடுப்பிட்டி, திங்கள்

தேவரையாளி இந்துக்கல்லூரி ஆசிரியர் கோஷ்டிக்கும் மாணவர் கோஷ்டிக்கும் இடையே கல்லூரி மைதானத்தில் வருடாந்த உதைபந்தாட்ட மோதல் நடைபெற்றது ஆட்டம் தொடங்கியதும் இருதரப்பினரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல் விறுவிறுப்பாக விளையாடத் தொடங்கினர்.

இம்மோதலில் மாணவர்கள் 5—2 கோல்களால் ஆசிரியர்களைத் தோற்கடித்தனர்.

இப்போட்டிக்குத் திரு. கே. தம்பித்துரை மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நல்ல காரியங்களில் வெற்றிபெற சுலபமான வழி அளவற்ற பொறுமையையும், முடிவில்லா முயற்சியையும் அளவுகடந்த தூய்மையையும் கடைப்பிடித்தலாகும்.

—விவேகானந்தர்.

ஈழநாடு

Eelanadu B. Honey Vann. Daily
Telegram: "EELANADU" Jaffna;
Post Box: 49; Jaffna: Telephone: 889

சௌம்ய ஸாதாரண வருஷம் கார்த்திகை மாதம் 2ந் திகதி (17-11-70)

## விசாரணை தேவைதான்

கட்டுபெத்த தொழில் நுட்பக்கழகத்தில் நடந்த சம்பவம் பற்றி பாரபட்சமற்ற விசாரணை நடைபெறவேண்டுமென்று கோரப்படுகிறது. இதேசமயம் அந்தக் கழகத்துக்கு இருபத்தி மூன்று மாணவர் எந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டனர் என்பது பற்றி விசாரணைசெய்ய வேண்டுமென அக் கழக மாணவர்கள் கோரியிருக்கின்றனர். இதுதவிர பல்கலைக்கழகப் பொறியியல் பிரிவுக்குத் தமிழ் மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்ட முறை குறித்தும் மாணவர் மத்தியில் மட்டுமல்ல பெற்றோர் ஆசிரியர் மத்தியிலும் அதிருப்தி நிலவுகிறது. பலரும் பலவிதமான புகார் தெரிவிக்கின்றனர். இவை ஒருபுறமிருக்க பட்டதாரி ஆசிரியர் நியமனம் பற்றியும் பல பல குற்றச் சாட்டுக்கள் தெரிவிக்கப் படுகின்றன.

இக் குற்றச்சாட்டுக்களுக்கும் புகார்களுக்கும் கல்வி அமைச்சர் விளக்கம் கூறியிருக்கிறார் இந்த விளக்கம் யாருக்கும் திருப்தி அளித்ததாகத் தெரியவில்லை. புகார்கள் அதிகரிக்கின்றன; அதிருப்தியும் அதிகரிக்கிறது.

பல்கலைக்கழகங்களுக்கும் தொழில்நுட்பக் கழகங்களுக்கும் மாணவர்களைச் சேர்க்கும் பொறுப்பை பல்கலைக் கழகங்களிடமும் தொழில் நுட்பக் கழகங்களிடமும் விட்டுவைத்தால் இதுபோன்ற புகார்களுக்கும் குற்றச் சாட்டுக்களுக்கும் இடமிருக்காது மாணவர் பெற்றோர் மத்தியில் அதிருப்தியும் ஏற்பட இடமிருக்காது.

கல்வி அமைச்சருக்குப் பல பொறுப்புள்ள வேலைகள் இருக்கின்றன. புதிய சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அரசாங்கத்தின் அமைச்சர்களுக்குப் பெரும் பொறுப்புக்களும் கடமைகளுமிருக்கின்றன. இச் சமயத்தில் பல்கலைக்கழகங்களுக்கும் தொழில்நுட்பக் கழகங்களுக்கும் மாணவர்களை அனுமதிப்பதிலும் ஆசிரியநியமனங்கள் இடமாற்றங்களிலும் அமைச்சர் தமது நேரத்தைச் செலவிடுவதும் இதனால் ஏற்படக்கூடிய தவறான அபிப்பிராயங்களுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருப்பதும் தேவையற்ற பிரச்னை.

பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் பட்டதாரிகளுக்கும் உயர் கல்விபெறவும் வேலைவாய்ப்புக் கிடைக்கவும் வசதி செய்து கொடுப்பது தவறல்ல என்றாலும் இதற்கும் ஒரு திட்டம் அல்லது ஆட்சிமன்றத்தின் அங்கீகாரம் பெற்ற ஒரு சட்டம் இருந்தால் வீண் புகார்களுக்கு இடமேற்படாது.

என்றாலும் பல்கலைக்கழகங்களுக்கும் தொழில்நுட்பக்கழகங்களுக்கும் மாணவர்களை அனுமதிப்பது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட முறைபற்றியும் பட்டதாரி ஆசிரிய நியமனம் சம்பந்தமாகப் பின்பற்றப்பட்ட முறைபற்றியும் ஒரு தகுதிவாய்ந்த விசாரணைக் கமிஷனை நியமித்து மக்கள் அறியச்செய்வதன் மூலம் கல்வி அமைச்சரின் நற்பெயரைத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். இதற்கு கல்வி அமைச்சரே முன்வந்து விசாரணைக் கமிஷன் நியமிக்கக் கோருவதே மிகச் சிறப்பு.

## பாகிஸ்தான் சூறாவளி

பாகிஸ்தானின் சரித்திரத்தில் மட்டுமல்ல உல...

விப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? ...

# 'திருமுறைகள் ஓதினால் பிரச்னை தீரும்'

## சர்க்கரைப் பந்தலில் தேன் மழை பொழிந்தார் கி.வா.ஜ.

கொழும்பு விவேகானந்த சபையினர் கடந்த இரு தினங்களாகத் திருமுறை விழாவைச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். விவேகானந்த சபையினர் கொண்டாடிய திருமுறை விழாவிலே ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாகத் திரண்டிருந்து திருமுறையின் சாரத்தைப் பருகினார்கள்.

சைவர்கள் ஓதி உணர்வதற்கு இன்றியமையாததாக இருக்கும் நூல்கள், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா திருப்பல்லாண்டு திருத்தொண்டர் பெரிய புராணம் என்பனவாம். இந் நூல்கள் சிவனின் அருளினால் பாடப்பட்டமையால் அருட்பா என்பர். இவற்றில் முன்னைய நான்கும் தோத்திர வடிவிலும், பின்னைய பெரியபுராணம், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பதங்களையும் அனுட்டித்து முத்தி பெற்ற அடியார் சரித்திர வடிவிலும் உள்ளன.

பன்னிரு திருமுறைகளின் சாரத்தை எடுத்து, இரண்டு நாட்களிலும் தேனுடன் கலந்து பட்டிமன்றம், கவியரங்கு, இசையரங்கு, உரையரங்கு ஆகியவற்றின் வாயிலாக, விவேகானந்தசபையினர் அன்பர்களுக்குப் பருகக் கொடுத்தார்கள்

### சர்க்கரைப் பந்தலில் தேன் மழை

இத்திருமுறை விழாவிலே சிறப்புச் சொற்பொழிவாளராகக் கலந்துகொண்ட தமிழக அறிஞர் திரு. கி. வா. ஜெகநாதன், சர்க்கரைப் பந்தலில் தேன் மழை பொழிந்ததுபோல இரு அரும்பெரும் உரையை நிகழ்த்தினார் முதல்நாள் தனது உரையில் திருமுறைகள் இந்த உலகம் உய்வதற்குக் காட்டக்கூடிய வழிகளைப் பற்றி எடுத்துக்காட்டினார்.

"உள்ளத்து விவகாரங்கள் திருமுறைகள் ஓதினால் அகன்றுவிடும். திருமுறைகளின் நலன் குறித்த எல்லைக்குள் அடங்குவன அல்ல. திருமுறைகள் உலக நலனுக்கும், வாழ்வுக்கும் வழி வகுக்கவல்லன. மனித வாழ்வுக்குத் திருமுறைகள் அவசியமானவை. வடமொழி ...

வழங்கிய திரு. கி. வா. ஜெகநாதன் 'சேக்கிழார் தந்த செல்வம்' என்னும் பொருள் பற்றிப் பேசினார்.

### கி. வா. ஜ. பேசுகிறார்

பன்னிரு திருமுறைகளில் முதல் எட்டும் சிவனைப் பற்றியும், ஒன்பதாம் திருமுறை முருகன், சிவனைப் பற்றியும் பத்தாம் திருமுறையில் சிவன், விநாயகர், முருகன், அம்பாள் ஆகியோர் பற்றியும், பதினோராம்திருமுறையில் சிவன், விநாயகர், முருகன், அம்பாள், தொண்டர்கள் பற்றியும், பன்னிரண்டாம் திருமுறையில் தொண்டர்களைப் பற்றியும் கூறப்படுகின்றது. எனவே அவதாமாகப் பார்க்கும்போது முதலில் சிவனைப் பற்றியும் அடுத்துச் சிவனையும், சிவனுடைய குடும்பம் பற்றியும் பின்னர் சிவன், சிவனின் குடும்பம், அடியார்கள் பற்றியும் ஈற்றில் அடியார் பற்றியும் திருமுறைகளில் கூறப்படுவதையும் காணமுடிகிறது. சேக்கிழார் வைத்த பெயர் திருத்தொண்டர் புராணம் ஆனால் பெரிய புராணம் என்பது வழக்கால் வந்த பெயராகும்.

தொண்டர்கள் சிவனிலும் பெரியவர்கள் அதற்குச் சான்று உண்டு.

புறநானூற்றில் ஒரு பாடல் உள்ளது ஈயெனக் கேட்பது இழிந்தது, ஈயெனக் கேட்கும் போது இல்லையென்பது அதனிலும் இழிந்தது குறிப் பறிந்து கொடுப்பது உயர்ந்தது அவ்வாறு கொடுக்கும் போது வேண்டாமெனக் கூறுவது அதனிலும் உயர்ந்தது என்னும் பொருள் படும் பாடல் புறநானூறில் வருகின்றது.

### இறைவனை விட உயர்ந்த தொண்டர்

இறைவன் கொடுக்கவரும் போது தொண்டர்கள் வேண்டார் என்கின்றார்கள். கூடுகின்ற அன்பினால் இறைவனைக் கும்பிடுவதன்றி மோட்ச வீடும் வேண்டாம் என்கின்றார்கள் தொண்டர்கள் அந்தத்தொண்டர்கள் இறைவனிலும் உயர்ந்தவர்கள் ஓட்டையும் பொன்னையும் ஒக்க நோக்கும் தன்மை கொண்டவர்தாம் இத் தொண்டர்கள்.

தொண்டர்கள் நமது மத்தியிலேயே இருப்பதினால் தொண்டர்தம் பெருமை எமக்கு விளங்குவதில்லை. ஆனால் சேக்கிழார் தொண்டர் பெருமையை நன்கு அறிந்திருந்தார். தொண்டர் தம்பெருமை சொல்லல் அரிதன்றோ.

அக்கால சூழலை அப்படியே படப்பிடித்துகாட்டும்பெரிய புராணம் ஒரு காப்பியமாகும்.

இயற்கையை உருவகப் படுத்தி பின்சொல்ல வந்த தினை உள்ளுறை உவமை மூலம் முன்னரே வெளிப்படுத்தும் பாங்கு சேக்கிழாரிடம் உண்டு.

தொகுப்பு:

**மு. சின்னத்துரை**

ஆத்மஜோதி நா. முத்தையா வாகீசர்வாக்குபற்றி பேசும்போது கூறியதாவது:

சமூகத்தொண்டு மூலம் ஆண்டவனை அடையலாம் சம்பந்தர் திருநாவுக்கரசு நாயனாரிடம் தொண்டருக்கு உரிய இலட்சணங்கள் அனைத்தையும் கண்டார் சொல்லுக்கும், செயலுக்கும் மாறுபாடாத நெறியை வாகீசரிடம் காணமுடிகின்றது.

ஒருவன் சமூகத்தொண்டு செய்வதின் மூலம் தனக்கு உயர்வு தேடிக்கொள்ளும் அதே நேரம் இறைவனின் கருணைக்குள்ளும் ஆட்படுகின்றான் என்றார்.

திருமதி வசந்தாவைத்தியநாதன் செல்வி செல்வமணி வடிவேலு ஆகியோரும் இரண்டாம் நாள்உரையரங்கைச் சிறப்பித்தார்.

# தமிழ்உரை நடைத்தந்தை

சிதம்பரத்தில் இம் மாதம் 21-ம் திகதி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை கொண்டாடப்படவிருக்கிறது. அதனையொட்டி விழா நற்பொறுப்பாளர் எழுதும் கட்டுரை கீழேதரப் படுகிறது.

**தி. க. இராசேசுவரன்**

சென்ற நூற்றாண்டிலே பழைய தமிழ் நூல்களை அரிதில் தேடி வெளியிட்ட ... வழிகாட்டி ... காலத்திலேயே உரை ...

ஒவ்வோர் ஆண்டும் நிகழும் நாவலர் பெருமானின் குருபூசை விழாவன்று நடைபெறும் பாராட்டுக் கூட்டத்தில் நாவலர்பெருமானைப் பற்றி நான் அரிதிற் கேட்டறிந்த செய்திகளை அவை யழிந்துபோகா வண்ணம் குறிப்பிடுதலை நாவலர் பெருமானின் அறநிலையப் பொறுப்பாளர்க்குரிய என் கடமைகளில் முக்கியமான தொன்றாகக் கடைப்பிடித்து வந்துள்ளேன்.

அவ்வாறே இவ்வாண்டும் எனக்குத் தெரியவந்த செய்தி ஒன்றைக் கூறத் துணிந்துள்ளேன். அதுஎன்ன ... நாவலர் பெருமான் ... ம் பதிப்பித்தசூடாமணி நிகண்டில் ...

'மிலேச்சரே யநாரியரே' என்று காணப்படுகிறது' இம் மாற்றத்தைப் பாடபேதமாகக் கொள்வதற்குக் குறப்பொன்றும் கொடுக்கப்படவில்லை

சேந்தன் திவாகரத்தையும் பிங்கல நிகண்டையும் பின்பற்றியது சூடாமணி நிகண்டு. திவாகரத்திலும் பிங்கலந்தையிலும் உள்ள பாடத்தைப் பின்பற்றியே சூடாமணி நிகண்டு முதற் பதிப்பில் உள்ள பாடமும் காணப்படுகிறது. இதற்கு முற்றும் மாறாக நாவலர் பெருமான் காலத்திலேயே வெளிவந்தஇரண்டாம்பதிப்பில் காணப்படுகிறது. யாதோர் விளக்கமும் கொடுக்கப்படாமையால் மேற் கூறிய கூற்றை மறுக்க முடி...

## ஜெயராஜ் எழுதுவது:

பழைய யமன் செத்து விட்டான்! இப்போது இருப்பது புது எமன். அவனைப் பற்றி யாரும் பயப்படவே தேவையில்லை. எருமைக் கடாமீது ஏறி நான்கு கைகளிலும் சூலம், பாசம், கோடரி எல்லாம் வைத்துக் கொண்டு நல்லூர் சிவன் கோயில் அடியிலே ஒதுங்கி நின்றுகொண்டிருந்தான். யாரும் அவனைக் கவனிக்கவும் இல்லை! ஆமாம்!

சாதாரணமாக எமன் என்றால் நமக்கெல்லாம் பயம்தானே, யாருக்குத் தான் சாக விருப்பமிருக்கும்! மார்க்கண்டேயருக்கு 16 வயதானதும், அவர் விதி முடிந்ததென்று தன் தூதனை அனுப்புகிறான் யமன் சிவ பூஜை செய்யும் மார்க்கண்டேயரை தூதனால் அணுகவும் முடியவில்லை. எம பயம் போக மார்க்கண்டேயர் ம்ருத்தியுஞ்ஜய (எமனை வெல்லும்) மந்திரம் சொல்லிக்கொண்டே பூசை செய்கிறார்.

தூதன் வந்து சொன்னதைக் கேட்டதும், எமனே கோபத்துடன் தன் எருமை வாகனத்தில் ஏறி பாசக் கயிறு முதலிய தன் ஆயுதங்களுடன் அட்டகாசம் செய்துகொண்டு வருகிறான். அங்கும் இங்குமாக ஓடி ஓடி அதட்டி அச்சுறுத்துகிறான். தான் பூசித்த இலிங்கத்தை மார்க்கண்டேயர் அப்படியே கட்டிப் பிடித்துக்கொண்டார். எமன் தன் பாசக் கயிற்றை இலிங்கத்தையும் சுற்றி வீசினான், உடன் இலிங்கம் வெடிக்கிறது. உள்ளே இருந்த நடராஜப் பெருமான் தமது இடது காலால் உதைத்து அருள் செய்யவே யமன் அப்படியே செத்துச் சாய்ந்துவிட்டான்.

யமன் ஒழிந்ததால் பூலோகத்தில் யாருமே சாகவில்லை. பூமிபாரம் அதிகரித்துவிட்டது. பிரம்மா அன்ன வாகனத்தில் ஏறிவந்து சிவபெருமானிடம் முறையிட்டார். அவரது முறைப்பாட்டுக்கு இணங்கி, இனி தன்னுடைய அடியார்கள் விஷயத்தில் அதிக கவனமாக இருக்க வேண்டுமென காலகாலனார் எச்சரித்து, யமனுக்குப் புத்துயிரளித்து பாசக்கயிற்றையும் அவனிடமே திருப்பிக் கொடுத்தார். யமன் தன் கொட்டமடங்கி, பின்வாங்கி ஒடுங்கிவிட்டான். சிவபக்த ...

...க்கும் சாவே இல்லையா என்று கேள்வி எழலாம். சாவு உண்டுதான். ஆனால் அதற்கு இனி யாரும் பயப்படத் தேவையில்லை அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்ச வருவதுமில்லை என்ற மனத்திண்மையுடன், யமனையும் எதிர்நோக்கலாமல்லவா:

நேற்று அமெரிக்க சாது சுப்பிரமுனியாவைப் பற்றியும், அவர்கள் நடத்தும் தியானக்கலை பல்கலைக் கழகத்தைப் பற்றியும் குறிப்பிட்டேனல்லவா! அப் பல்கலைக்கழகத்தில் பத்திரிகைகளைப் படிக்கவும்கூடாதாம்! அரசியலில் எவ்வித தொடர்பும் கிடையாதென்று அறிந்தேன். ஹவாய் தீவிலே தான் அப் பல்கலைக்கழகமுள்ளது. அளவெட்டியிலே இந்த ஆசிரமத்துக்கு யோகர்சுவாமிகளின் திருவுள்ளப்படி, மூன்று அடுக்குள்ள புதிய கட்டடம் கட்டப்படப்போவதாகத் தெரிகிறது.

0 0 0

மருட்குயர்வன்றர் சித்த
மாணி மார்க்கண்டேயர்க
காய், இருட்டிய மேனி
வளைவாள் எயிற்றெரி
போலுங்குஞ்சிச், அருட்டிய
ராகில வெங்கூற்றம் பதைப்
பவுதைத்துங்ஙனே, உருட்
டிய சேவடியான் கடவூ
ருரை உத்தமனே.

— அப்பர் அடிகள்.

## சோலைவரி ஆட்சேப வழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், செவ்

தனது காணிக்கு யாழ் மாநகரசபை விதித்திருந்த 1969-ம் ஆண்டு சோலைவரி கூடிவிட்டதென்று ஆட்சேபித்து நீராவியடியைச் சேர்ந்த ஏ. சண்முகநாதன் யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

யாழ்ப்பாணம் முதலாம் வட்டாரத்திலுள்ள சண்முகநாதனின் காணிக்கு 1969ம் ஆண்டு வருட மதிப்பீட்டில் பதினொன்கரை வீதமாக சோலைவரி 464 ரூபாய் என யாழ் மாநகரசபை அறிவித்திருந்தது.

தனது காணி தண்ணீர் விநியோகிக்கப்படும் பகுதிக்கு அப்பாற்பட்ட எல்லையிலிருக்கிறதென்... சோலைவரி மதிப்பீட்டில் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்புள்ள வேலைகள் சிறப்பு.

## பாகிஸ்தான் சூறவளி

பாகிஸ்தானின் சரித்திரத்தில் மட்டுமல்ல உலகின் சமீபகால சரித்திரத்திலேயே கண்டும் கேட்டுமிராத அளவுக்கு பாகிஸ்தானில் சூறவளி கோரத்தாண்டவமாடியிருக்கிறது. ஒரு லட்சம் மக்கள் மாண்டிருக்கிறார்கள்; பிணங்கள் மரக்கிளைகளில் தொங்கிகொண்டிருக்கின்றன. அங்கிருந்து கிடைக்கும் செய்திகளைப் பார்க்கும் போதும் கேட்கும் போதும் கலங்காத நெஞ்சும் கலங்கும்

1964-ம் ஆண்டில் ஒரு சிறிய சூறவளியின் கொடுமையை அறிந்த இலங்கையின் வடக்குப் பகுதி மக்கள் பாகிஸ்தானின் நிலையையும் பாகிஸ்தான் மக்களின் அவலநிலையையும் உணர்ந்துகொள்வது கஷ்டமல்ல. வெள்ளம், புயல் வரட்சி ஆகிய இயற்கையின் சீற்றங்களை இலங்கை மக்கள் நன்கு அறிவர்.

இயற்கையின் சீற்றத்தால் அவதியுறும் பாகிஸ்தான் மக்களுக்காக இலங்கை மக்கள் அனுதாபங்கொண்டுள்ளனர். தூரத்திலிருக்கும் மக்கள் அனுதாபந் தெரிவிப்பதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? என்றாலும் அனுதாபத்துக்கு அடையாளமாக இங்கிருந்து இயன்றளவில் பாகிஸ்தான் மக்களுக்கு உதவிபுரிய வேண்டியது இலங்கை அரசாங்கத்தினதும் மக்களினதும் கடமையாகும்.

உலக நாடுகள் பலவும் பாகிஸ்தானுக்கு அனுதாபந் தெரிவித்திருப்பதுடன் தங்களால் இயன்றளவுக்கு உதவியளிக்க முன்வந்துள்ளன

பாகிஸ்தான் உருவானதிலிருந்து நட்புறவுக்கே இடமில்லாமல் அரசியலில் வேறுபாடு கொண்டு பகை நாடுகளாக வாழ்ந்துவருவது இந்தியாவும் பாகிஸ்தானும். ஆனாலும் பாகிஸ்தானில் சூறவளி பெரும் கொடுமை செய்திருக்கிறதென்பதை அறிந்ததும் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி ஐந்து லட்சம் ரூபாய் உதவியாக அளித்திருப்பது உலகில் மனிதப் பண்பு இன்னும் செத்துவிடவில்லையென்பதை உணர்த்துகிறது.

ஆசிரியருக்கு கடிதம்

## பெரியாஸ்பத்திரியில்

ஒரு குறிப்பிட்ட மருந்தை எழுதிக்கொடுக்கிறார் டாக்டர். நோயாளி மருந்துத் துண்டைக் கொண்டுபோய் மருந்தகத்தில் நீட்டுகிறார் அங்குள்ள பெண்மணி அதனை வாங்கித் திருப்பிப் பார்த்துவிட்டு உதட்டைப் பிதுக்கி 'இல்லை' என்கிறார். ஒருவேளை "ஸ்டோரில்' இருக்கும் போய்க் கேட்டுப் பாருங்கள்'' என்கிறார். நோயாளி தூரத்திலுள்ள 'ஸ்டோர்' அறைக்குப் போய்த் துண்டை நீட்டுகிறார். அங்கே இருப்பவர்களும் தலையை ஆட்டுகிறார்கள். நோயாளி மீண்டும் மருந்தகத்துக்கும், 'ஸ்டோருக்கும் போய்விட்டு டாக்டரிடமே திரும்புகிறார்.

''சரி, மருந்துக்குரிய 'பிரிஸ்கிரிப்ஷனை' எழுதித்தரச்சொல்லி வெளியில் எங்காவது வாங்கிக்கொள்ளுங்கள்'' என்று டாக்டர் நோயாளியை அனுப்பிவிடுகிறார். அவர் முகத்தில் கடுகடுப்பு. ஆனால் நோயாளிக்கோ அங்குமிங்கும் ஓடியதில் களைப்பு.

ஸ்டோரில் உள்ளவர்கள் மருந்துக் கலவைக்கான குறிப்புகளை எழுதிக்கொடுக்கிறார்கள். நோயாளி வெளியிலுள்ள மருந்தகம் ஒன்றில் போய்த் தமக்கு வேண்டிய மருந்தைப் பணம் கொடுத்துப் பெற்றுக் கொண்டு போகிறார்.

காலை பதினொரு மணிக்கு ஆஸ்பத்திரிக்கு வந்து இரண்டுமணி வரைக்கும் பகல் உணவுமின்றிக் காத்திருந்த நோயாளி வீடு திரும்பும்போது நான்கு மணியாகிவிடுகின்றது.

யாழ்ப்பாணப் பெரியாஸ்பத்திரியில் சரும நோய்க்காக மருந்தெடுக்கப்போன நோயாளி ஒருவருக்கு ஏற்பட்ட அனுபவம் இது.

இது மட்டுமல்ல, ஆஸ்பத்திரியில் பொதுவாகவே மருந்துத் தட்டுப்பாடு பல நாட்களாகவே இருந்துவருகின்றது. ஏழை எளிய மக்கள் இந்த மருந்துத் தட்டுப்பாட்டினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

முக்கியமான ஊசி மருந்துகள் எதுவுமே ஆஸ்பத்திரியில் கிடைப்பதாய் இல்லை வெளியிலிருந்தே பணம் கொடுத்துப் பெறவேண்டியிருக்கின்றது. இந்த நிலைமையை அதிகாரிகளும், மற்றவர்களும் அறியாமல் இருக்க முடியாது இந்த அவல நிலைமை உடனடியாக மாறுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

வெளிநோயாளர்களுக்குத்தான் இந்த நிலைமையென்று இல்லை. வார்ட்டுகளில் படுத்திருக்கும் ஏழை நோயாளிகள் பலரும் இந்த நிலைமைக்கு ஆளாகிவருகிறார்கள்.

ஆஸ்பத்திரியில் கிடைக்காத பல மருந்துகள் வெளியில் பணத்துக்குக் கிடைக்கின்றன.

பணக்காரர்களுக்கு இதனால் கஷ்டமெதுவும் இருக்க முடியாது. ஆனால் எளிய மக்கள் என்ன செய்வார்கள்?

ஒரு நோயாளி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

திருமுறைகள் உலக நலனுக்கும், வாழ்வுக்கும் வழி வகுக்கவல்லன. மனித வாழ்வுக்குத் திருமுறைகள் அவசியமானவை. வடமொழியில் வேதம் இருக்கிறதென்றால் தமிழில் திருமுறைகள் இருக்கின்றன. இறைவன் இந்த உலகிற்கு என்ன கூற வேண்டுமோ, அதை அவன் அடியார்கள் வாயிலாகக் கூறியுள்ளான். இருபத்தொரு அடியார்கள் பன்னிரு திருமுறைகளைத் தந்திருக்கிறார்கள்.

தேவாரங்கள் இறைவனின் வாக்காகும் அவற்றை ஓதினால் மன விகாரங்கள் நீங்கிப் பெருவாழ்வு பெற வழி கிட்டும்'' என்றார்.

முதல்நாள் நிகழ்ச்சிக்கு திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை தலைமைதாங்க, திரு கி லட்சுமண ஐயர் வரவேற்புரை நிகழ்த்த, திரு. இரா. சபாநாயகம் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

கவியரங்கு

திரு கி வா. ஜெகநாதன் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் ஈழத்து முன்னணிக் கவிஞர்கள் பல பாகங்களிலுமிருந்து கலந்து கொண்டார்கள். தேவார இசைமணி திரு. எஸ். இராஜசேகரன் தனது பக்திப்பண் திறத்தால் அன்பர்களை இரு மணிநேரம் எங்கெங்கெல்லாம் இழுக்க அவர்கள் அங்கெங்கெல்லாம் சென்னர். திருமுறைகள் அதிக பயன் தருவது இம்மையிலா மறுமையிலா? என்பது பற்றி நடந்த விவாதம் பலரது கவனத்தையும் கவர்ந்தது.

திரு. வி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இரண்டாம் நாள் நிகழ்ச்சி முற்றிலும் உரையரங்காக அமைந்தது சிறப்புரை


...டிலே பழைய தமிழ் நூல்களை அரிதில் தேடி வெளியிட்ட பதிப்பாளர்களுக்கு வழிகாட்டியாக விளங்கி, அக்காலத்திலேயே உரைநடையின் வருங்கால முக்கியத்துவத்தை தெள்ளிதின் உணர்ந்து, செய்யுள் வடிவிலேயிருந்த நூல்களை உரைநடை நூல்களாகச் செய்தும் சிற்றிளைஞர்முதல் முதியோரும் பயனடையக்கூடிய வண்ணம் உரைநடை நூல்கள் பல இயற்றியும் தமிழில் உரைநடை வளர்ந்தோங்க வழிகோலித் 'தமிழ் உரைநடைத் தந்தை என வியந்து அழைக்கப்பட்ட அரும்பெரும் செயலாளரும் நமதருங் குரவுமான ஆறுமுக நாவலர் பெருமானின் 91-ம் குருபூசை இம்மாதம் 21-ம் திகதி சிதம்பரம் சேக்கிளார் கோவிலிலும் நாவலர் உயர்நிலைப் பள்ளியிலும் நடராசர் கோவிலிலும் நடைபெறவிருக்கிறது.

...செய்தி ஒன்றைக் கூறத் துணிந்துள்ளேன். அதுஎன்னவென்றால் நாவலர் பெருமான் தாம் பதிப்பித்தசூடாமணி நிகண்டில் மக்கட் பெயர்த் தொகுதியில் ...ம் செய்யுளில் மிலேச்சரேயாரியரே' என்பதை 'மலேச்சரே யநாரியரே' என மாற்றிவிட்டதாக நிலவும் கூற்றாகும்.

நாவலர் பெருமான் பதிப்பித்த சூடாமணி நிகண்டின் முதற்பதிப்புச்சுவடி ஒன்றும் இரண்டாம் பதிப்புச் சுவடி ஒன்றும் கிடைத்துள்ளன. முதற் பதிப்பு 1849-ம் ஆண்டு சென்னபட்டணம் சரஸ்வதி விலாச அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது. இரண்டாம் பதிப்பு 1867-ம் ஆண்டு சென்னபட்டணம் கலாநிதி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டுள்ளது. முதற்பதிப்பில் 'மிலேச்சரே யாரியரே' என்பது இரண்டாம் பதிப்பில் பெருமான் காலத்திலேயே வெளிவந்தஇரண்டாம்பதிப்பில் காணப்படுகிறது. யாதோர் விளக்கமும் கொடுக்கப்படாமையால் மேற் கூறிய கூற்றை மறுக்க முடியாத நிலைஏற்படுகிறது.

இம் மாற்றமேயன்றிச் சூடாமணி நிகண்டின் முதற் பதிப்பிற்கும் இரண்டாம் பதிப்பிற்கும் மற்றுஞ் சில வேறுபாடுகளும் காணப்படுகின்றன.

'நன்றே யுறுகமன் றீதே
யுறுகவெந் நாயகமே
நின்றேயமார் சைவ தேசிக்
கோலமு நின்பெயரும்
என்றேயு மென்னுள வும்
மறவாவர மீந்தருளாய்
குன்றே! எம்ஆறு முகநா
வல! சற் குருமணியே!'
— சற்குருமணிமாலை



## றமழான் குரலொலி

''மேலும் இரந்து வருபவனை வெருட்டாதீர்''

(சதகல்லாஹுல் அழீம்) (கலாமுல்லாஹ்! 93 ம் அத்தியாயம்: 10-ம் வசனம்)

உண்பதற்கு ஊணும், உடுப்பதற்கு உடையும் குடியிருக்க ஒரு சிறு குடிசையும் எல்லோருக்கும் தேவையானதே. ஆனல் இவ்வசதிகள் அனைத்தும் எல்லோரிடமும் இருக்கப்பெறுதல் அரிது. மானிடர்களில் உள்ளார், இல்லார் என இருபிரிவினர் உளர். முன்னவர்கள், இல்லாதோர் இரந்துவரும் பொழுது ஈந்து வாழ்வதில்தான் இன்பவாழ்வு உண்டாகும்,

ஈகையற்ற உலோபிகள் எத்தனையோ பேர் எம்மிடை மலிந்து கிடக்கின்றனர், அவர்களிடம் வறுமைப்பிணியால் வதைக்கப்பட்டு வாழ்க்கையே வேப்பங்காயாய் மாறிப்போன ஏழைகள் தலைவிரி கோலத்தோடும், கந்தலுடையோடும் தர்மம் கேட்டுப்போனதும், கடிந்துவிழுந்து காட்டுமிராண்டித்தனமாய் நடந்துகொள்வதைப்பார்த்து கண்ணீர்விடவேண்டியுள்ளது.

இதுபோன்ற சிலரின் அறிவீனச் செயல்களினால் தான் இன்று பிச்சைக்காரனாய்த் திரிந்தவன் நாளை கொலைகாரனாயும் கொள்ளைக்காரனாயும் மாறிவிடுகிறான்.

எனவேதான் திருக்குர்ஆன் ''பிச்சை கேட்பவனை வெருட்டிவிடாது முடிந்தால் உதவு, இல்லையென்றால் அழகிய வார்த்தைசொல்லி அனுப்பிவிடு'' என்று எடுத்தோதுகின்றது. நாம் திருக்குர்ஆனின் போதனைக்கேற்ப நடப்போமாக.

அஸ்ஸலாமு அலைக்கும்.

வழங்குபவர்: மௌலவி ஏ. எம். ஏ. ஹசன் [கபூரி]

தொழுகை நேரங்கள் :-

| சுபஹு | உதயம் | ளுஹர் | அஸர் | மஃரிப் |
|---|---|---|---|---|
| 4-41 | 6-01 | 12-20 | 3-19 | 5-51 |
| | இஷா | | சஹர்முடிவு | |
| | 7-11 | | 4-26 | |

## விழா நிகழ்ச்சிகள்

21-ம் திகதி 6 மணிக்கு சேக்கிழார் கோவிலில் விநாயகர் வழிபபாடு 7-30 நாவலர் பெருமானின் திருவுருவச் சிலையும் முதற்பதிப்பு நூற்சுவடிகளும் கோவிலிருந்து நாவலர் உயர்நிலைப் பள்ளிக்கு ஊர்வலம் 8-45 பள்ளிமன்றத்தில் குருபூசை 10-30 மாணவர்களுக்குத் தின் பண்டங்கள் வழங்குதல் 11-30 நடராசர்கோவிலில் திருமுழுக்கும் வழிபாடும்

மாலை 4-00 மணிக்குப் பள்ளிமன்றத்தில் பாராட்டுக்கூட்டம்

நாவலர் அம்மானை பாடி ஆடுதல் நாவலர் கும்மி, நாவலர் கீர்த்தனைப்போட்டி நாவலர் பேச்சைஒப்பித்தல் போட்டி நாவலரைப்பற்றிய பேசுப்போட்டி நாவலர் மீதுபாடல் நாவலர் வாழ்க்கை நாடகம் நாவலர்மீது கீர்த்தனை முதலியன விழாவில் இடம் பெறும்

திரு. ஏ. வி. சுப்பிரமணியம் தலைமையில் நிகழும் இவ் விழாவில் வித்துவான் என் சீனிவாச முதலியார் புலவர் எம் தம்பிராசா ஆகியோர் உரை நிகழ்த்துவர்

... ...

## கெய்ரோவில் பதவி ஏற்பார்

வெள்ளவத்தை, திங். இலங்கை இராஜதந்திர சேவையைச் சேர்ந்த ஸ்ரீ என். கே. இராஜலிங்கம் ஐக்கிய அரபுக் குடியரசின் இலங்கை ஸ்தானிகராலய அதிகாரியாகப் பதவி ஏற்பதற்காக கடந்த 28ந் திகதி பீ. ஓ. ஏ. சீ விமானத்தில் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து கெய்ரோ பயணமானார் இவர் நயினாதீவைச் சேர்ந்தவராவர்.

...துயிரளித்து பாசக்கயிற்றையும் அவனிடமே திருப்பிக் கொடுத்தார். யமன் தன் கொட்டமடங்கி, பின்வாங்கி ஒடுங்கிவிட்டான். சிவபக்தனை மார்க்கண்டேயர் என்றும் பதினாறாகத் திகழ்கின்றார் யமனை வீழ்த்திய இந்தத் திருவிழா நல்லூர்சிவன் கோவிலில் சென்ற வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது ஏராளமான கூட்டம். கூட்ட நெருக்கத்தில் சிக்கிக் கொண்டேன். பல குழந்தைகளும் நெருக்கம் தாங்காமல் அழுதன, யமன் ஏதும் விஷமம் செய்துவிடுவானோ என்றும் தோன்றியது! ஆனல் அவன் தோற்றுவிட்டதைக் கண்டபின், அந்தப் பயம் ஏன்? இந்த யம சங்காரத் திருவிழாவை நேரில் தரிசித்து. யம பயம் நீங்கி பல்லாயிரக்கணக்கானோர் புதுத்தைரியத்துடன் வீடு திரும்பினர்.

கோயில் குருக்கள் மிருத்யுஞ்ஜய மகாமந்திரத்தை மிக உருக்கமாக உரத்த குரலில் பன்முறையும் மிக உணர்ச்சியுடன் உச்சரித்தார். அது கேட்டோர் உள்ளத்தைத் தொட்டது. சிவலிங்கம் வெறும்கல்லல்ல, அதன் உள்ளே சிவபெருமான் அடியார்களைக் காக்க எப்போதும் காத்திருக்கிறார் என்ற தத்துவத்தை இவ்விழா காட்டி, ''சிவனுண்டு பயமில்லை'' என்ற நாவலர் பெருமானின் வாக்கை உறுதிப்படுத்துவதாக இருந்தது.

இம்முறை இலங்கை வானொலிநிலையத்தார் இந்த விழாவை ஒலிபரப்பியதும் ஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் பொருத்தமான தேவாரங்களைப் பாடி. மேலானமுறையில் விமர்சனம் செய்ததும் பாராட்டத்தக்கது.

அப்படியானல் இனி யாரு

### சிவாச்சார்யாபிடேகம்

அன்புடையீர்! நிகழும் சாதாரண வருஷம் கார்த்திகை மாதம் 3-ந் திகதி (18-11-70) புதன்கிழமை காலை 8 மணிக்கு மேல் 10 மணிக்குள் வருகின்ற தனுலக்கின சுபமுகூர்த்தத்தில் வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான பிரதமகுரு அமரர் பிரம்மஸ்ரீ ச, கணபதிசாமிக்குரு அவர்களின் கனிஷ்ட புத்திரன் பிரம்மஸ்ரீ க. இராமச்சந்திர சர்மா அவர்களுக்கு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவிலில் சிவாச்சார்யாபிஷேகம் நடைபெறும். உறவினர்களும் நண்பர்களும் இவ்வழைப்பை ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம். திருமதி கணபதிசாமிக்குரு குடும்பத்தினர், வல்லிபுராலயம், துன்னாலை வடக்கு, கரவெட்டி 2516

திருந்தது.

தனது காணி தண்ணீர் விநியோகிக்கப்படும் பகுதிக்கு அப்பாற்பட்ட எல்லையிலிருக்கிறதென்றும் சோலைவரி மதிப்பீட்டில் பன்னிரண்டரை வீதமே அறவிட உருத்தென்றும் ஆ. சண்முகநாதன் யாழ் மாநகரசபைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தார்!

மாவட்ட நீதிபதி திரு ஏ. வைத்திலிங்கம் இவ்வழக்கை விசாரணை செய்தார்.

இந்தப் பிரச்னையில் இரு தரப்பினருக்கும் ஏற்பட்ட சமரசத்தையொட்டி வருடாந்த மதிப்பீட்டின் அடிப்படையில் பன்னிரண்டரை வீதம் மட்டுமே குறிப்பிட்ட காணிக்கு சோலைவரி அறவிட யாழ் மாநகரசபைக்கு உரிமையுண்டு என்றும் 1969-ம் ஆண்டின் மதிப்பீட்டின்படிபதின்நான்கரை வீதத்துக்கு அல்லவென்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வழக்காளிக்கு யாழ் மாநகரசபையை 105 ரூபா செலவுதொகை கட்டும்படியும் மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

— —

## பொறியியல் ...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வர்கள் கட்டுப்பெத்தை தொழில்நுட்ப பல்கலைக் கழகத்துற்கும், பேராதனை பொறியியல் பீடத்திற்கும் தெரிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனல் தற்போதைய செய்திகளை பார்க்கும் போது, பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்திற்கு 56 மாணவர்களும், கட்டுப்பெத்தை தொழில்நுட்ப பல்கலைக் கழகத்திற்கு 44 மாணவர்களுமாக, மொத்தம், 100 தமிழ் மாணவர்கள் மட்டும் உயர் தொழில்நுட்ப கல்விபயில தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய மாற்றங்களுக்கு கல்வியமைச்சர் கொடுக்கும் காரணம் 'தரப்படுத்தல்' என்பதாகும் இதுஎமக்கு பெரும் சிரிப்பையும் அதேசமயத்தில் ஆத்திரத்தையும்ஏற்படுத்துகிறது. சிங்கள மொழி மூலம் பயிலும் மாணவர்களுக்கு சில புள்ளிகளைக் கூட்டுவது அல்லது பிரவேசத்திற்குத் தேவையான புள்ளிகளின் எண்ணிக்கையைத் தமிழ் மொழிமூலம் பயிலும் மாணவர்களுக்குக் கூடுதலாகவும், சிங்களமொழிமூலம்பயிலும் மாணவர்களுக்குக் குறைவாகவும் நிர்ணயித்துப் பல்கலைக்கழகப் பிரவேச முடிவுகளைத் தீர்மானிப்பது தரப்படுத்துதலாகுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org